Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 புரட்டாதி-23 09-10-2004 சனிக்கிழமை ஓசை -234




உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-10476) விநாயகர் வீதி, மலிகிட்டி.

## தேசியத் தலைவரின் பன்முக ஆளுமையை சித்திரிக்கும் நூல் பல நாடுகளில் வெளியீடு




தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் பன்முக ஆளுமையைச் சித்திரிக்கும் Prabhakaran A leader for all seasons (காலங்களை வெல்லும் தலைவன்) என்னும் நூலின் மீள்வெளியீடுகள் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் நடைபெறவுள்ளன. இந்த வகையில் இன்று ஜேர்மனியிலும், வரும் 17ஆம் திகதி பிரான்சிலும், நவம்பர் 06ஆம் திகதி அமெரிக்காவிலும் இவ் வெளியீடு இடம்பெறவுள்ளது.

ஏனைய நாடுகளில் இடம்பெறும் நாள் குறித்த விபரம் பின்னர் அறிவிக்கப்படவுள்ளது. இந்நூலின் வெளியீடு கடந்த 2ஆம் திகதி சுவிஸ் பேர்ண் நகரில் நடைபெற்றமை தெரிந்ததே.

## நீண்டதூரம் ஊடுருவித் தாக்கும் ராணுவ அணி கலைக்கப்பட்டதாம்

### படைத்தரப்பு கூறுகிறது


(கொழும்பு)

இராணுவத்தின் நீண்டதூரம் ஊடுருவித் தாக்கும் படையணி கலைக்கப்பட்டுள்ளதாகப் படைத்தரப்புத் தெரிவித்துள்ளது. இந்தப் பிரிவு வவுனியாவில் இருந்து இயங்கி வந்தது. இதனைக் கலைத்து விடுமாறு உயர் இராணுவ அதிகாரி ஒருவர் உத்தரவிட்டதன் அடிப்படையில் அது கலைக்கப்பட்டுள்ளதாகவும், அதில் சேவையாற்றி வந்த அதிகாரிகள் மீண்டும் பழைய சேவைகளில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஓகஸ்ட் 18 ஆம் திகதி இந்தப் பிரிவு கலைக்கப்படுவதற்கான உத்தரவு மேலிடத்தில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## -திருமலையில் சமாதானத்திற்கு எதிரான-

# இனவாத சக்திகளின் ஊடுருவலைக் கண்டித்து

# பூரண கதவடைப்பு; இயல்புநிலை பாதிப்பு!



## அரச நிறுவனங்களும் இயங்கவில்லை

(திருமலை)

**சமாதானத்திற்கு எதிரான இனவாத சக்திகள் திருமலையைத் தங்கள் வன்முறையின் மத்திய இடமாக மாற்றியுள்ளதைக் கண்டித்து தமிழ்மக்கள் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஹர்த்தாலினால் நேற்று திருமலை நகரின் இயல்பு நிலை முற்றாக பாதிக்கப்பட்டது.**

தமிழ்மொழிமூலப் பாடசாலைகள், அரச, மாகாணசபை மற்றும் உள்ளூ ராட்சி அலுவலகங்கள் இயங்கவில்லை. அரசமற்றும் தனியார் வர்த்தக வங்கிகள் இயங்கவில்லை. சிங்கள வியாபாரிகளின் ஆதிக்கத்தில் உள்ள திருகோண மலை நகரசபைக்குச் சொந்தமான மீன், இறைச்சி மற்றும் காய்கறிச் சந்தைகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

தமிழ், முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. சிங்களப் புறநகர்ப் பகுதிகளில் சிங்களக் கடைகள் திறந்திருந்தன. சிங்களப் பாடசாலைகளில் சிங்கள மாணவர்கள் குறைவாகவே காணப்பட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## லெப்.கேணல் விக்டரின் சிலையை மன்னாரில் அமைக்க முயன்றோர் கைது

### பொலிசாரின் அடாவடிக்கு மக்கள் எதிர்ப்பு

(மன்னார்)

மூத்த தளபதியும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினருமான மாவீரர் லெப்டினன்ட் கேணல் விக்டர் அவர்களுக்கு மன்னார் நகரத்தின் மத்தியில் பொதுமக்களால் சிலை ஒன்று வைப்பதற்காக நேற்று முன்தினம் அதற்குரிய ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட வேளை மன்னார் பொலிசார் அதனைத்தடுத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தம்மை மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி திருமலையில் தமிழ்மக்கள் மறியல்

(திருகோணமலை)

தங்களின் சொந்தக் கிராமங்களில் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் தமிழ்க்கிராமங்களில் சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்து வதையும், புதிதாக பௌத்த விகாரைகள் கட்டப்படுவதையும் நிறுத்துமாறு கோரியும் அலஸ்தோட்ட அகதி முகாமில் தங்கியுள்ள தமிழ் அகதிகள் முகாம் அருகாகச் செல்லும் திருமலை நிலாவெளி வீதியை நேற்று மறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அவ்வீதியால் வந்த இராணுவ கடற்படை வாகனங்களும் ஆர்ப்பாட்டக் காரர்களால் மறிக்கப்பட்டன. இராணு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாளைஇரவு 8.00 மணிவரை வரலாற்றுக் கண்காட்சி

2ஆம் லெப். மாலதியின் நினைவு நாளையும், தமிழீழ பெண்களின் எழுச்சி நாளையும் முன்னிட்டு கிளி. மத்திய மைதானத்தில் நடைபெற்று வரும் மகளிர் படையணிகளின் போரியல் வரலாற்றுக் கண்காட்சி. மக்களின் பெருவிருப்புக்கும், வேண்டுகோளுக்குமிணங்க இன்று முதல் நாளை இரவு 8.00மணிவரை திறக்கப்பட்டிருக்கும். சரியாக இரவு 8.00 மணிக்கு சிறப்புக்கலை நிகழ்வுகள் ஆரம்பமாகும் என்பதை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 2ஆம் லெப் மாலதி நினைவு நாள் நாளை தமிழர் தாயகமெங்கும் அனுஷ்டிக்க ஏற்பாடு

2ஆம் லெப். மாலதியின் நினைவு நாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு தமிழீழமெங்கும் நாளை காலை 9.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகி சிரமதானப் பணிகள், கருத்தரங்குகள் என்பன நடைபெறும். மாலை நிகழ்வுகளாக பிரதேச ரீதியாக எழுச்சி ஊர்வலங்கள் நடைபெற்று மாலை 5.45 இற்கு பொதுச்சுடரேற்றி, தேசியக்கொடியேற்றி, சுடரேற்றி, மாலையிட்டு, மலர் வணக்கம் செய்து, அகவணக்கம் செய்யப்படும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் 3ஆவது நாளாக சிறப்புற நடைபெற்றது

(அலுவலக செய்தியாளர்)

2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் பதினேழாவது நினைவு நாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் சிறப்பிக்கும் முகமாக ஆரம்பமான எழுச்சிநாள் நிகழ்வின் 03 ஆம் நாள் நிகழ்வுகள் நேற்று சிறப்புற நடைபெற்றன.

ஆரம்ப நிகழ்வாக காலை 9.00 மணிக்கு பொதுஈகச்சுடரினை மாலதி படையணியின் சிறப்புத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### திருவுருவப்படம் இணைப்பு

2ஆம் லெப்.மாலதி அவர்களின் வர்ணத்திருவுருவப் படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப் பட்டுள்ளது.



# பிறந்தநாள் வாழ்த்து

## எங்கள் குட்டிக் குமரனுக்கு

### இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

எம் காலங்களின் மகிழ்வே
உன் புன்னகையில்
விடிகிறது எங்களின் வாழ்வு.
நாளைகள் உனக்கென்றும்
நலமென மலர்ந்திட
உண்மையும் நேர்மையும்
உன் துணை வந்திட,
வளமோடு நீ வாழ
வாழ்த்துகிறோம் நீ வாழ்க!.

என்றும் உனை வாழ்த்தும்,
உன்பாச உறவுகள்.

(5051)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது


விசுவமடுவைச் சேர்ந்த பால யோகமணி என்பவரது தேசிய அடையாள அட்டையும், பயண அனுமதி அட்டையும் 30.09.2004 அன்று முகமாலைக்கும் விசுவ மடுவிற்கும் இடையில் தவறி விட்டது. இதனைக்கண்டெடுத் தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (5162)

### வகுப்பு ஆரம்பம்

தமிழ் ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்துப்பயிற்சிகள் ஆரம்ப மாகவுள்ளன. கற்க விரும்புவோர் காலம் 01.10.2004 தொடக்கம் 30.10.2004 வரை அனுமதிகள் பெற் றுக்கொள்ளலாம். மற்றும் தட்டச்சு இயந்திரங்கள் திருத்தவேலை வகுப்புக்களும் நடைபெறும். இடம்.பிறைட் தொழில்சார் பயிற்சி நிலையம் ஆனந்தபுரம், யாழ். சாலை,கிளிநொச்சி. நிர்வாகி.

(5154)

## சாவு அறிவித்தல்



### கனகசுந்தம் ஜெயதாஸ்

சுதந்திரபுரம், கொலனி, உடையார்கட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகசுந்தரம் சிவமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் ஜெயதாஸ் (ஜெயன்) கடந்த 08.10.2004 அன்று சுகயீனம் காரணமாகச் சாவடைந்துள்ளார். இவர் காலஞ்சென்ற சுந்தரதாஸ், மோகனதாஸ், (சுதந்திரபுரம்), வாசுகி (சுதந்திரபுரம்) வினோதினி (சுதந்திரபுரம்) காலஞ்சென்ற சுதாஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைக்காக 09.10.2004 அன்று 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு சுதந்திரபுரம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றார்கள்.

முகவரி:-
சுதந்திரபுரம் கொலனி,
உடையார்கட்டு.

தகவல்:-
பெரியதாய்,
பூமலர் (மலர்).
குடும்பத்தினர்.

(5166)

# அருச்சுனா

## வண்ணக் கலையகம்

1 மணி நேரத்தில்



அதிநவீன FRONTER 355 டிஜிற்றல் இயந்திரம் மூலம் தனது படப்பிரதி யாக்கல் சேவையை ஆரம்பித்து விட்டது என்பதை வழமை யாளர்கள் அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத்தருகிறது...

அருச்சுனா புகைப்படக் கலையகம்

புதுக்குடியிருப்பு சந்தி–புதுக்குடியிருப்பு (சி-10260) கந்தசாமி கோவிலடி–கிளிநொச்சி

## உடற்கல்வி டிப்ளோமா முதலாம், இரண்டாம் ஆண்டுப் பரீட்சை 2003/2004

உடற்கல்வி டிப்ளோமா முதலாம் ஆண்டுப்பரீட் சையும், இரண்டாம் ஆண்டுப் பரீட்சையும் 11.10.2004 அன்று ஆரம்பமாக உள்ளதால் மேற்படி பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்தி கள்காலதாமதமின் றிப் பரீட்சை அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ளும்படி வேண டப்படுகின்றீர்கள்.

(சி-10261) பதிவாளர்.

08. முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டபடி கேள்வி கோருவோர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு கேள்வி கோரலாம். தகுதியுடைய கேள்வி கோருவோருக்கு ஆரம்பத்தில் ஒப்பந்தங்கள் அளிக்கும்போது கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகக்கூடிய ஒப்பந்தங்கள் அளிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| தரம் M1 மற்றும் M2 | - | ஆகக்கூடியது மூன்று (3) ஒப்பந்தங்கள். |
| தரம் M3 | - | ஆகக்கூடியது இரண்டு(2) ஒப்பந்தங்கள். |
| தரம் M4,M5,M6&M7 | - | ஆகக்கூடியது ஒன்று (1) ஒப்பந்தம். |

தரம் M1 மற்றும் M2 ஒப்பந்தகாரர்களுக்குத் திட்டத்தின் கீழ் மூன்று ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக அளிப்பு மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒப்பந்தங்களில் ஏதாவது இரண்டில் 50 % பௌதீகப் பூர்தியினைக் கொண்டுள்ள அதே வேளை மூன்றாவது ஒப்பந்தத்தில் 80% திருப்திகரமாகப் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். (மதிப்பீடு செய்வதன் நிமிர்த்தம் 80% பௌதீகப்பூர்த்தியினை கொண்டுள்ள திட்டங்கள் முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டதாகக் கருதப்படும்)

தரம் M3 ஒப்பந்தகாரர்களுக்கு திட்டத்தின் கீழ் இரண்டு ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக அளிப்பு மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒப்பந்தங்களில் ஏதாவது ஒன்றில் 50% திருப்திகரமான பௌதீக பூர்த்தியினை கொண்டுள்ள அதேவேளை இரண்டாவது ஒப்பந்தத்தில் 80% திருப்திகரமாகப் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். (மதிப்பீடு செய்வதன் நிமிர்த்தம் 80% பௌதீகப்பூர்த்தியினை கொண்டுள்ள திட்டங்கள் முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டதாகக் கருதப்படும்)

- தரம் M4, M5, M6 மற்றும் M7 ஒப்பந்தகாரர்களுக்கு திட்டத்தின் கீழ் ஏதாவது ஒரு ஒப்பந்தம் அளிக்கப்பட்டிருந்தால் அதன் 80% திருப்திகரமான பௌதீக பூர்த்தியின் பின்னரே ஏனைய அளிப்பு செய்யப்படும்.

மேற்கூறப்பட்ட பிரமாணத்தில் தகுதியான ஒப்பந்தகாரர்களுக்கு ஒப்பந்தங்கள் அளிக்கும்போது மொத்தத்தில் அதிகுறைவான செலவினை பிரதிபலிக்கின்ற கேள்வி கோருவோருக்கு ஒப்பந்தம் அளிக்கப்படும்.

09. கேள்வி கோருவோருடைய தகைமையானது கேள்விப்பத்திரத்தினுடைய தொழில்நுட்பப் பரிசீலனையின் பகுதியாக கீழே குறிப்பிடப்படுபவையும் மீளாய்வு செய்யப்படுவதோடு கேள்விக்கொத்தில் வழங்கப்பட்ட ஏனைய விபரங்களும் உள்ளடக்கப்படும்.

(i)கட்டுமானப்பணியில் ஐந்து (5) வருடம் பொதுவான அனுபவம் (ii) கடந்த மூன்று வருடங்களுக்குள் குறைந்தது ஒரு வீதி வேலையில் இந்த ஒப்பந்தத்திற்குச் சமமான நிபந்தனையில் விசேட அனுபவத்தையும் மற்றும் (iii) கடந்த மூன்று வருடங்களுக்குள் ஒப்பந்தகாரர் தரம் M3 இல் அல்லது அதற்குமேல் உள்ளோர் கட்டுமானப்பணியில் குறைந்தது ரூபா 100 மில்லியன் பெறுமதி சுழற்சியில் ஈடுபட்டும் மற்றும் தரம் M4 இல் உள்ளோர் ஒப்பந்தத்தில் ரூபா 60 மில்லியன் பெறுமதி சுழற்சியில் ஈடுபடுத்தப்பட்டிருத்தல்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக மாட்டார்.

எஸ்.அமரசேகர,
செயலாளர்/தலைவர் அமைச்சு கேள்விச்சபை,
நெடுஞ்சாலைகள் அமைச்சு,
9ஆம் மாடி "செத்சிரிபாய"
பத்தரமுல்லை.

(சி-10255)

# போராளிகள் சரணடையும் பேச்சுக்கே இடமில்லை

# பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத் திட்டவட்ட அறிவிப்பு



(ஜெருசலேம்)

**காஸா குன்றுமுனைப்பகுதியில் உள்ள பலஸ்தீன போராளிகள், இஸ்ரேல் இராணுவத்திடம் ஒரு போதும் சரணடைய மாட்டார்கள் என்று பலஸ்தீன இயக்கத் தலைவர் யசீர் அரபாத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.**

பலஸ்தீன மக்களுக்கு வானொலியில் திங்கட்கிழமை அவர் உரையாற்றினார்.காஸா பகுதியின் மீது இஸ்ரேல் இராணுவம் கடந்த வாரம் தாக்குதலை தொடங்கிய பிறகு அரபாத் ஆற்றிய இந்த உரை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதலை முறியடிக்கபலஸ்தீனப் போராளிகள் உறுதியுடன்இருந்து வருகின்றனர். எனவே வெற்றி நமதே என்று அரபாத் குறிப்பிட்டார்.



பாரிசிலுள்ள இந்தோனேசியத் தூதரகத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பையடுத்து அங்கு காவலில் நிற்கும் பொலிசார்.

# எகிப்தில் தொடர் குண்டுவெடிப்பு 122 பேர் பலி; பலர் படுகாயம்

எகிப்தில் நேற்று முன்தினம் இரவு மூன்று குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நடந்துள்ளன. இதில் 19 பேர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலிய எல்லைப் பகுதியை ஒட்டியஎகிப்தின் றாவா எல்லையை யொட்டிய நட்சத்திர விடுதியில் மட்டும் இந்தக் குண்டு வெடிப்பால் 122 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் அதிகமானவர்கள் இஸ்ரேலியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வெடிகுண்டுகளுடன் வந்த பாரவூர்தி ஒன்று விடுதியுடன் மோதி விடுதியைத் தகர்க்க முற்பட்டதாகக் காவல்துறையினர் கூறியுள்ளனர்.

இந்தக் கொடூரச்செயல் அல்-ஹைதாவின் நடவடிக்கை என்று இஸ்ரேல் சந்தேகம் வெளியிட்டுள்ளது.இதனால் எகிப்திலிருக்கும் இஸ்ரேலியர்கள் வெளியேற வேண்டுமென்றும் இஸ்ரேல் கேட்டுக்கொண்டுள்ளது.

முதல் குண்டுவெடித்த இரண்டு மணி நேரம் கழித்து றாப்-அல்-சுல் தானினும். நியூபா எனும் நகரிலும் அடுத்தடுத்துக் குண்டுகள் வெடித்ததில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாகப் பலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.



நேற்று எகிப்தின் ஹில்டன் ஹோட்டலில் ஏற்பட்ட கார்க்குண்டு வெடிப்பில் சேதமடைந்த கட்டடத்தை அவதானிக்கும் எகிப்தியப் பொலிசாரும் காத்திருக்கும் இஸ்ரேலிய மீட்புப் படையினரும்.

# 5650 தொன் எடை கொண்ட கட்டடத்தை 200 அடி நகர்த்தி வைத்து சீனா சாதனை

சீனாவில் ஷாங்காய் நகரில் உள்ள 5650 தொன் எடையுள்ள பிரபல கலையரங்கை 200 அடி தூரத்தில் உள்ள மற்றோர் இடத்துக்கு நகர்த்தி சீன என்ஜினியர்கள் சாதனை புரிந்துள்ளனர். இக் கட்டடம் 74 ஆண்டுகள் பழமை வாய்ந்தது இந்தக்கலையரங்கை புதுப்பிக்கும் பணி ஒகஸ்ட் 31-2002 இல் ரொடங்கியது இக் கட்டடம் ரூபா 83.26 கோடி செல வில் நகர்த்தி வைக்கப்பட்டது. இக் கலையரங்கு முன்பை விட 4 மடங்கு அதிக பரப்பளவு கொண்டதாகப் புதுப்பிக்கப்பட்டுள்ளது. புதுப்பிக்கப்பட்டு வேறோரு இடத்துக்கு நகர்த்தப் பட்டுள்ள இந்தக் கலை யரங்கம் மீண்டும் ஒக்டோபர் 1 ஆம் திகதி செயற்படத் தொடங் கியது. முதலில் பிரிட்டிஷ் ராயல் இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இக் கலையரங்கு 2006 வரை ரிசர்வ் செய்யப்பட்டுள்ளது. 1930 இல் தொடங்கப்பட்ட இந்தக் கலையரங்கு ஷாங்காய் நகரிலேயே மிகவும் பெரியது.

# நீண்டகாலம் மகனைப் பூட்டி வைத்திருந்த நோர்வேத் தாயொருவர் பொலிசாரால் கைது

நோர்வேயில் வட பகுதி நகரமொன்றில், தாயொருவர் தனது 4வயது மகனை நீண்டகாலமாக வெளியே விடாது வீட்டில் பூட்டிவைத்த சம்பவம் நடந்துள்ளது.

காவல்துறையினர் தாயைக் கைது செய்துள்ளனர். பிள்ளை சிறுவர் நலக்காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிள்ளையை ஒரு நாளேனும் வெளியில் காணாத அயலவர்களே பொலிஸாரிடம் இது பற்றி முறையிட்டதாகக் கூறப்படுகின்றது.

# அமெரிக்காவில் மீண்டும் கட்டாய இராணுவசேவை? வாக்கெடுப்பு நடத்த குடியரசுக்கட்சி வேண்டுகோள்

அமெரிக்காவில் மீண்டும் கட்டாய இராணுவ சேவையை கொண்டுவரப் போவதாகக் கூறப்படும் யூகங்களுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று அமெரிக்க பிரதிநிதிகள் அவையின் குடியரசுக்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். அந்தவகையில், அனைவருக்கும் கட்டாய இராணுவ சேவையை வலியுறுத்தும் மசோதா மீது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர். 18 முதல் 26 வயது வரையிலான அமெரிக்கர்கள் 2 ஆண்டுகள் கட்டாயம் இராணுவத்தில் பணி புரிய வேண்டும் என இந்த மசோதா வலியுறுத்துகின்றது. ஆனால் இந்த மசோதாவுக்கு அமெரிக்க பாராளுமன்றத்தில் மிகக் குறைந்த ஆதரவே கிடைக்கும் என்று கூறப்படுகின்றது. 1973 இற்குப் பிறகு அமெரிக்காவில் கட்டாய இராணுவ சேவைஇல்லை. எனினும் அமெரிக்கர்கள் அனைவரும் இராணுவத்தில் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் சண்டை தீவிரம் அடைந்திருப்பதால், அமெரிக்காவில் மீண்டும் கட்டாய இராணுவ சேவையை வலியுறுத்தும் சட்டம் கொண்டு வரப் படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. இதையடுத்து, அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமெரிக்க மக்களிடமிருந்து ஏராளமான தொலைபேசி அழைப்புக்களும்,கடிதங்களும் வந்து கொண்டிருக்கின்றன.



வடகொரியா அணு உற்பத்தி தொடர்பாகப் பேச்சு நடத்த வந்திருக்கும் ஆறு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பீஜிங் நகர விருந்தினர் விடுதி நோக்கிச் செல்கின்றனர்.(வடகொரியா எப்போது வேண்டுமாயினும் மீண்டும் பேச்சை ஆரம்பிக்கத் தயார் நிலையிலுள்ளது)

# செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருந்தது; அமெரிக்க விண்கலங்கள் கண்டுபிடித்தன

செவ்வாய்க் கிரகத்தில் மலை மற்றும் சமவெளிப் பகுதிகளில் முன்பு ஏராளமான அளவு தண்ணீர் இருந்தமைக்கான புதிய ஆதாரங்களை அமெரிக்காவின் ஸ்பிரிட் மற்றும் ஒப்பசூனிட்டி விண்கலங்கள் கண்டுபிடித்துள்ளன.

கடந்த சனவரி மாதம் முதல் செவ்வாய்க் கிரகத்தை இந்த விண்கலங்கள் ஆய்வு செய்துவருகின்றன.

ஒப்பசூனிட்டி விண்கலம் அது தரையிறங்கிய பகுதிகள் ஒரு காலத்தில் கடலாக இருந்தமைக்கான ஆதராங்களைக் காட்டும் புகைப்படங்களையும்,ஸ்பிட் விண்கலம் சிறிதளவு தண்ணீர் இருந்தமைக்கான ஆதாரங்களைக் காட்டும்புகைப்படங்களையும் பூமிக்கு அனுப்பி இருக்கின்றன.

செவ்வாய்க் கிரகத்தில் வரண்டு போன பகுதி பின்னர் மீண்டும் ஈரமாவதற்கான தகவல்களை ஒப்பசூனிட்டி விண்கலம், நாஸா ஆய்வு மையத்திற்கு அனுப்பியுள்ளது.

பூமியிலுள்ள பாறைகளில் தண்ணீரினால் ஏற்படும் வெடிப்புகள் போன்று செவ்வாயிலுள்ள பாறைகளிலும் வெடிப்புக்கள் உள்ளதாகவும், இது செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருந்தமைக்கான ஆதாரங்களாக அமைவதாகவும் ஒப்பசூனிட்டி விண்கலம் அனுப்பிய தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



பலூஜாவில் அமெரிக்க வான்படையினர் நடத்திய தாக்குதலில் சேதமடைந்த குடியிருப்புக்களை பார்வையிடும் மக்களையும்; காயப்பட்ட சிறுவன் ஒருவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருப்பதையும் காணலாம்.

# பயங்கரவாத சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி மனித உரிமை அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம்

இந்திய பயங்கரவாதச் சட்டத்தை முன்திகதியிட்டு இரத்துச் செய்யவேண்டுமென்று இந்திய மத்தியரசிடம் வலியுறுத்தி அகில இந்திய ரீதியில் மனித உரிமை அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளன.தமிழகம் குடியுரிமை பாதுகாப்பு நடுவகம் சார்பில் இந்த ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது. இதில் மக்கள் உரிமைக் கூட்டமைப்பு தமிழக மனித உரிமைக்கழகம் போன்ற பல்வேறு அமைப்புக்கள் கலந்து கொண்டுள்ளன.பொடோ சட்டத்தை மத்தியரசு திரும்பப் பெற்றாலும் கூட, புதிய பெயரில் தடுப்புக் காவல் .சட்டத்தை மத்தியரசு கொண்டுவரவுள்ளது.

இந்தச் சட்டம் பொடோ சட்டத்திலுள்ள பல ஆபத்தான பிரிவுகளை உள்ளடக்கி இருப்பதாக இந்த அமைப்புக்கள் குற்றஞ் சுமத்தி இந்தச் சட்டத்தை மீளப்பெறும் அதேநேரம், பொடோ சட்டத்தை முன் திகதியிட்டு திருப்பப்பெற வேண்டுமென்று அகில இந்திய ரீதியில் பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளன.

# முக்காடுடன் கடமைக்குச் செல்ல முடியாது ஜேர்மன் மானில அரசொன்று அறிவிப்பு

(பேர்ளின்)

ஜேர்மனியின் பெஷன் மாநில அரசு ஆசிரியர்களும், அரச அலுவலர்களும் தலையில் முக்காடு இட்டபடி கடமைக்குச் செல்ல முடியாது எனும் சட்டத்தை நேற்று முன்தினம் அமுற் படுத்தியுள்ளது.

இஸ்லாமிய மக்கள் முக்காடு இட்டபடி கடமைக்குச் செல்வது என்பது அடிப்படைச் சட்டத்தில் இல்லாததொன்று என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.பாரன்ஆர், கார்லன் போன்ற மாநிலங்கள் ஏற்கனவே இந்தச் சட்டத்தை அமுற்படுத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# உலர் உணவு நிவாரணம் வழங்க அரசு பின்னடிப்பு

# ஒரு வாரத்தில் தீர்வின்றேல் மறியல் போராட்டம்!

## கிளி.அரச செயலகத்தை முடக்க மக்கள் முயற்சி

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது வழங்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தோர் உலர் உணவு நிவாரண முத்திரைகளுக்கான பொருட்களை ஒரு வாரத்தினுள் வழங்காது விடின் கிளி.அரச் செயலகம் முன்பாக மக்கள் போராட்டத்தில் குதிக்க தயாராகி வருகின்றனர்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது உலர் உணவு நிவாரண முத்திரைகள் வழங்கப்பெற்று வருகின்ற பொழுதிலும் அதற்கான உலர் உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

தற்போது வழங்கப் பெற்று வரும் நிவாரண முத்திரைகளுக்கான உலர் உணவுப் பொருட்களுக்குரிய கொடுப்பனவுகளைச் சம்பந்தப்பட்ட அமைச்சு இதுவரை கிளிநொச்சி அரச செயலகத்திற்கு வழங்காமையின் காரணமாகவே மேற்படி கொடுப்பனவுகளை வழங்க முடியாத சூழ்நிலை கிளி.மாவட்டத்தில் தோன்றியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பத்து மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய உலர் உணவு நிவாரணப் பொருட்களில் இதுவரை 6 மாதங்களிற்கான உலர் உணவு நிவாரணப் பொருட்களே கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு வழங்கப் பெற்றுள்ளதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது வழங்கப்பெற்று வரும் நிவாரண முத்திரைகளுக்கு 25 வீதமான உலர் உணவு அதாவது பருப்பு, சீனி என்பனவே வழங்கக் கூடியதாக உள்ளதெனவும் 75 வீதமான அரிசி, மா என்பனவற்றிற்கான கொடுப்பனவுகள் இன்னும் அரச செயலகத்திற்கு அமைச்சினால் அனுப்பிவைக்கப் பெறவில்லையெனவும் தெரிய வந்துள்ளது. இன்னும் ஒருவார காலத்திற்குள் தங்களுக்குரிய உலர் உணவுப் பொருட்கள் கிடைக்கப் பெறாதபட்சத்தில் கிளி.அரச செயலக நடவடிக்கைகளை ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் மக்கள் போராட்டத்தில் குதிக்க தயாராகி வருவதாகவும் செய்திகள் வெளி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## சேமிப்புத் திட்டம்

மன்னாரில் ரணச நிறுவனம் 26 சிக்கன சேமிப்பு சங்கங்களை உருவாக்கி சேமிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் நிமித்தம் மன்னாரில் ஏறக்குறைய 1200 குடும்பங்கள் நன்மை பெற்றுள்ளன. இதற்கான நிதியுதவியினை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிறுவனம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (மி)



கடந்த 27.09.2004 அன்று மாவீரர் லெப் இசைச்சிட்டு அவர்களின் 06 ஆம் ஆண்டு நினைவாக அவரின் குடும்பத்தினரால் வத்திராயன் உதயசூரியன் வி.க மைதானத்தில் நினைவரங்க திறப்பு விழா நிகழ்வு நிதித்துறையைச் சேர்ந்த இ.தாயகன் தலைமையில் இடம்பெற்றது. நினைவரங்க பெயர்திரை நீக்கத்தினை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் த.புகழேந்தி செய்துவைக்க, மண்டபத்திற்கான நாடாவினை கடற்புலிகளின் தளபதி சலீம் வெட்டித் திறந்துவைத்தார்.

## பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடைய மூவர் கைது

*–கோவில் உண்டியலை உடைத்தபோது பிடிபட்டனர்*

பல திருட்டுச் சம்பவங்களோடு தொடர்புடைய 17, 12, 10 வயது சிறுவர்கள் மூவர் கிளிநொச்சி செல்வாநகர் முத்துமாரியம்மன் கோவில் உண்டியலை உடைக்க முயன்ற போது பொதுமக்களால் பிடிக்கப் பட்டுள்ளனர். கடந்த 7ஆம் திகதி மதியம் நடந்ததாகக் கூறப்படும் இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட மூவரும் பொது மக்களால் பிடிக்கப்பட்டு கிளிநொச்சி காவல் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களை விசாரித்த போது தமது குழுவில் மேலும் பலர் இருப்பதாகவும், பல திருட்டுச் சம்பவங்களோடு தொடர்பு இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.



புதுக்குடியிருப்பு-பரந்தன் வீதியில் கைவேலிப்பகுதியில் மிகவும் ஒடுங்கிய பாலமாக இருந்து, வீதி விபத்துக்கள் இடம்பெற்று வந்த மேற்படி பாலம் புனரமைக்கப்பட்டு வருவதைப் படத்தில் காணலாம். (படம்:தவரட்ணம்)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அன்றைய தினம் கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட 244 முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

முன்னதாக ஆசிரியர்கள் கிளிநொச்சியிலுள்ள லெப். கேணல் சந்திரன் நினைவுப்பூங்காவிலிருந்து மலர் மாலை அணிவித்து, மங்கல வாத்திய இசை முழங்க பண்பாட்டு மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுகக்ழக இணைப்பாளர் இ.ராஜன் தலைமையில் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பெற்றன.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை கிளி/ தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் பிரபாகரன் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் செல்வி. தவப் புதல்வி, பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி நிறுவனச் செயலாளர் றஞ்சன், தமிழர் புனர்வாழ்வுக் கழக செய்திப்பிரிவு இணைப்பாளர் [illegible].வேலணையூர் சுரேஸ் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தேசியக் கொடியினை கண்டாவளை உதவிப்பணிப்பாளர் அதியமான் ஏற்றி வைத்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை நிர்வாக இணைப்பாளர் ஜெறாட் அவர்களும், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியினை நிறுவனத் தலைவர் சிவநாதன் ஏற்றிவைத்தார். சிறப்புரைகளைத் தொடர்ந்து ஆசிரியர்களுக்கு அன்பளிப்புக்கள் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றனர். (சோ)

## மன்.சித்தி விநாயகர் அ.த.க பாடசாலை மதிலருகில் கைக்குண்டு, 18 ரவைகள் கண்டு பிடிப்பு

(மன்னார்)

கடந்த புதன்கிழமை பிற்பகல் மன்னார் நகரப்பகுதிப் பாடசாலை மதிற்கரையில் ஒரு கைக்குண்டும், 18 ரவைகளும் கண்டு பிடிக்கப் பட்டு வெடிக்கவைக்கப்பட்டன.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; மன்னார் நகர்ப்பகுதி சித்திவிநாயகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் மதிற்கரையில் பிளாஸ்ரிக் கொள்கலன் ஒன்றினுள் ஒரு கைக்குண்டும், 18 ரவைகளும் இருப்பது நிர்மாணப் பணியாளரினால் கண்டு பிடிக்கப்பட்டு, உப்புக்குளம் கிராம அலுவலரினூடாகப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து தள்ளாடி இராணுவமுகாம் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் வெடிக்கவைக்கப்பட்டதாகவும். இது பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

# பெற்றோல் விநியோகத்தில் பெரும் கெடுபிடி

# அவலம் நீங்க வழி பிறக்காதா?

கிளிநொச்சி மாவட்டத்தில் எரிபொருளுக்கான தட்டுப்பாடு குறிப்பாக பெற்றோலுக்கான தட்டுப்பாடு இன்றுவரை தீர்க்கப்படாதிருப்பது பெரும் வேதனைக்குரிய விடயம். இதனால் பாவனையாளர்கள் தினம் தினம் பெரும் சொல்லொணாத் துன்பங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

பெற்றோலின் கட்டுப்பாட்டு விலை ரூ.78.50 சதமாக உள்ள போதிலும் தனியார் எரிபொருள் நிலையங்களில் 90 ரூபா முதல் 100 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. இருந்தும் கட்டுப்பாட்டு விலையில் ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக, எரிபொருளைக் குறிப்பாக பெற்றோலைப் பெறக்கூடிய சூழல் ஓரளவிற்கேனும் இருந்தும், அவற்றின் ஊடாக மேற்கொள்ளப் படும் கெடுபிடிகள் மக்களை பெரும் வேதனைக்கும், விசனத்திற்கும் உள்ளாக்குவதாக அமைந்து வருகிறது.

குறிப்பாக கிளிநொச்சி பரந்தன் சந்தியிலுள்ள கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெறும் கெடுபிடிகளையிட்டு மக்கள் பெரும் விசனமடைந்து காணப்படுகின்றனர்.

காலை 9 மணிக்குப் பின்னரே இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் திறக்கப்பட்டு அதன் பின்னர் எரிபொருள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றோல் விநியோகம் இடம்பெற்று வருகிறது. இதனால் எரிபொருளுக்காக பெருமளவானோர் தவம் கிடப்பது நாளாந்த நிகழ்வாக மாறியுள்ளது.

தமது அன்றாட தேவைகளுக்காக செல்வோர், மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவன ஊழியர்கள் குறித்த நேரத்திற்குத் தமது கடமைகளைச் சரிவர ஆற்ற முடியாத நிலைமைக்கு இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தினரால் உள்ளாக்கப்படுகின்றனர்.

நேற்றைய தினமும் காலை 9 மணிக்குப் பின்னரே எரிபொருள் விநியோகம் இடம்பெற்றவேளை, எரிபொருளுக்காக பெருமளவானோர் தவம் கிடந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இது தவிர குறித்த எரிபொருள் நிலையத்தில் மிகுதி சில்லறைப் பணமோ அல்லது சில்லறைப் பணத்திற்கான எரிபொருளோ வழங்கப்படுவதுமில்லை. பற்றுச்சீட்டில் எரிபொருளுக்கான மிகுதி சில்லறைப் பணம் குறிப்பிடப்படாமலும் அதற்கான எரிபொருள் வழங்கப்படாததுமான நிலை குறித்து மக்கள் தினமும் விசனத்தை வெளிப்படுத்தி வருவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மக்களுக்காகச் சேவையாற்றும் கூட்டுறவாளர் இவ்வாறு கண்மூடித்தனமான போக்கில் செயற்படுவதை அனுமதித்திருப்பது உடன் தடுத்து நிறுத்த வேண்டியது அவசியமானதும் மிகவும் இன்றியமையாததுமாகும்.


இதேவேளை கிளி.கரடிப்போக்கு சந்தியில் உள்ள கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் கடந்த சிலநாட்களாக பெற்றோல் இல்லை. திங்கட்கிழமைக்குப் பின்னர் நிலைமை சரியாகும் எனக் கூறுகின்றனர்.

தென்பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் 24 மணிநேரமும் இயங்கும் நிலையில் இங்குள்ள ஓரிரு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் குறித்த ஒருசில மணி நேரங்களுக்கு மட்டும் இயங்குவதும் பெற்றோலை தேவைக்கேற்ப வகையில் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதும் வேதனைக்குரிய விடயமாகும்.

தற்போதைய சூழலில் எரிபொருளைத் தடையின்றியும் குறித்தவிலையிலும் மக்கள் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கைகளை எடுப்பது அதிகாரிகளின் பொறுப்பல்லவா? இதனைக் கருத்திற் கொண்டு விரைவான நடவடிக்கை ஒன்றை எடுப்பதனூடாக நாளாந்தம் படும் அவலம் நீங்க வழிபிறக்கும். -ரஞ்சி

# ஒரு தசாப்த கால பணிநிறைவில்

# கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம்



கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வழிகாட்டலில் கடந்த ஒரு தசாப்தங்களுக்கு மேலாக வன்னிப் பெருநிலப்பரப்பில் தனது செயற்பாட்டினை நல்கி வருகின்றது.

இந்நிறுவனம் போர் அனர்த்தங்களின் விளைவாக இடம்பெயர்ந்து கல்வியைத் தொடர முடியாது இடைவிலகியவர்களை இனங்கண்டு அவர்களைப் பாடசாலைக் கல்வியில் இணைக்கும் நடவடிக்கையிலும் கல்வியினை நிறைவு செய்தவர்களுக்கு தொழிற்பயிற்சியினை வழங்கி அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றது.

மேற்படி கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத் தலைமை இணைப்பாளர் க.சீலன் அவர்களுடன் நிறுவனத்தின் செயற்றிட்டங்கள் குறித்து வினவியபொழுது அவர் தெரிவிக்கையில்,

போர் அனர்த்தங்களின் விளைவாக இடம்பெயர்ந்து தங்களது சொத்துடைமைகளை இழந்த நிலையில் தமது ஜீவனோபாயத்தினை மேற்கொள்ள முடியாத நிலையில் இளைஞர், யுவதிகள் தமது கல்வியினைத் தொடரமுடியாது பாடசாலைக் கல்வியினை விட்டு இடை விலகியிருந்த நிலையில் அவ்வாறானவர்களை இனங்கண்டு அவர்களை பாடசாலைக் கல்வியில் மீள இணைக்கும் வகையிலும் மற்றும் கல்வியினை நிறைவு செய்த இளைஞர், யுவதிகளுக்கு தொழில்சார் பயிற்சி வழங்கி அவர்களை சுயதொழில் முயற்சியில் ஈடுபடுத்தும் வகையில் 1995ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பெற்றது.

★நிறுவனச் செயற்பாடுகள் குறித்துத் தெரிவிக்க முடியுமா?

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன், தமிழர் புனர்வாழ்வுக்கழக பங்காளி நிறுவனங்களின் ஒத்தாசையுடன் 2000 தொண்டர்களின் கடின உழைப்பின் மூலம் இதுவரை பாடசாலைக் கல்வியினை இடைநிறுத்திய 20,000 மாணவர்கள் இனங் காணப்பெற்று அவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைத்துள்ளோம்.



பெற்றோர் மூலமாக இடை விலகல் மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைக்கும் வகையில் விழிப்பூட்டல் செயற்பாடுகளை மேற்கொண்டு அதாவது விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வீதி நாடகங்கள், குறும்படங்களை தயாரித்து மக்கள் மத்தியில் இதன் மூலம் விழிப்புணர்வினை ஏற்படுத்தினோம். இதன் பயனாக போர் அனர்த்தங்களினால் மற்றும் ஏற்பட்ட பல்வேறு காரணங்களினால் இடைவிலகிய 25,000 மாணவர்களில் 20,000 மாணவர்களை மீண்டும் பாடசாலைக் கல்வியில் இணைக்க முடிந்தது. மாலை நேர கற்கை செயற்பாடுகளும், இதற்கு உறுதுணை புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

★இந்தச் செயற்பாடுகளுக்கான நிதியுதவிகள் எவ்வாறு பெறப்பட்டன?

இந்த இடைவிலகல் மாணவர்களை பாடசாலைகளில் இணைக்கும் செயற்பாட்டிற்கென தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் யுனிசெவ் நிறுவனம் இதற்கான நிதியுதவியினை வழங்கி வருகின்றது.

இதன் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நலன்திட்டம் தயாரிக்கப்பெற்று அதன் மூலம் கிராமியமட்டத்தில் மிகவும் பாதிக்கப்பெற்ற சிறார்களை இனங்கண்டு அவர்களுக்கான கற்கை உபகரணங்களை வழங்கி கல்வியினை தொடர்வதற்கான ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அத்துடன் வறுமையிலும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட அதாவது உழைப்பாளி களை இழந்த குடும்பங்களிலுள்ள மாண வர்களுக்கு இலவச சீருடைகளை வழங்கி கல்வி வாய்ப்பினை மேற்கொள்வதற்கு உதவி நல்கி வருகின்றோம்.

குறிப்பாக கரைதுரைப்பற்று பிரதேசத்தில் 1725 பேருக்கும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 1882 பேருக்கும், துணுக்காய் பிரதேசத்தில் 800 பேருக்கும், மாந்தை கிழக்கு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 600 பேருக்கும், கிளிநொச்சி பிரதேசத்தில் 2000 பேருக்கும் கற்கை உபகரணங்கள், காகிதாதிகள் என்பனவற்றை வழங்கி கற்கை செயற்பாட்டிற்கு ஊக்கமளித்து வருகின்றோம்.

★இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் எந்த வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றீர்கள்?

இதற்கென உலக பல்கலைக்கழக கனேடிய சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன், நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கிளி.முல்லை மாவட்டங்களில் ஏழு தொழில்சார் பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்தி தொழிற்பயிற்சியினை வழங்கிவருகின்றோம்.

கட்டட தொழில் (மேசன்) பயிற்சிக்கென இரு நிலையங்களும், நீர் குழாய் இணைப்பு பயிற்சிக்கென இரு நிலையங்களும் மின்னிணைப்பு, மரவேலை , மின்னொட்டு

**கனகபுரச்சோதி**

என்பனவற்றிற்கென தலா ஒரு பயிற்சி நிலையமும் அமைக்கப்பெற்று இளைஞர், யுவதிகள் இரு பாலாருக்குமென பயிற்சிகள் வழங்கப்பெற்று வருகின்றன. ஒவ்வொரு பயிற்சிநெறிகளிலும் 25 இற்கு மேற்பட்டவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தற்போது 300 பேர்கள் பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர். இந்த வகையில் எமது நிறுவனம் எமது மண்ணில் இளம் தலைமுறையினரின் கல்விக்கும், இளைஞர்களின் சுய தொழில் முயற்சிக்கும் தனது முழுப்பங்கினையும் நல்கி வருகின்றது.

## இராணுவ ஆக்கிரமிப்பினுள் உசன் இராமநாதன் ம.வி மாணவர், பெற்றோர் மீது கடும் கெடுபிடி

(தென்மராட்சி)

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திற்கு வரும் பெற்றோர், பழைய மாணவர்கள் மீது சிறிலங்காப் படையினர் அத்து மீறிய கெடுபிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலையைச் சுற்றி படை முகாம்கள் மற்றும் இராணுவ அரணுக்கு மத்தியில் கல்விச் செயற்பாடுகளை மிகவும் பதட்டமான சூழ்நிலையில் மேற்கொண்டு வரும் மாணவர்கள் உளவியல் ரீதியான பாதிப்புக்களையும் சந்திக்கும் சூழல் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பாடசாலை வரும் , மாணவர்களின் பெற்றோர்களையும், பழைய மாணவர்களையும் படையினர் விசாரணை என்னும் பெயரில் கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே தங்களது வீடுகளை ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ள சிறிலங்காப் படைகள் தங்கள் குழந்தைகளின் கல்விச் செயற்பாட்டுக்கும் பெரும் தடைகளாய் இருப்பது குறித்து இப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். (28)

## பிறந்து சில மணி நேரத்திற்குள் பிள்ளையை உயிருடன் புதைத்த தாய்!

தான் பெற்ற குழந்தையைத் தாய் ஒருவர் உயிருடனேயே மண்ணில் புதைத்துக் கொலை செய்த சம்பவம் ஒன்று வடமராட்சி அல்வாயில் இடம் பெற்றுள்ளது.

வடமராட்சி அல்வாயிலுள்ள மாயக்கரைக் கிராமத்தில் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதான பெண் ஒருவர் தவறான நடத்தை மூலம் கர்ப்பம் தரித்து கடந்த 3 ஆம் திகதி ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார். எனினும் அக்குழந்தையால் ஏற்படக்கூடிய சமூகப் பிரச்சினைகளுக்கு அஞ்சிய பிரஸ்தாப பெண் தான் பெற்ற குழந்தையை அது பிறந்த சிலமணி நேரங்களுக்குள் தன்வீட்டு வளவினுள்ளேயே புதைத்துவிட்டார்.

ஆனால், கர்ப்பம் தரித்திருந்த பிரஸ்தாபப் பெண் குழந்தையைப் பிரசவித்து விட்டதற்கான உடலியல் மாற்றங்கள் தென்பட்டாலும் அவர் அதனை மூடிமறைத்து முன்னுக்குப்பின் முரணான தகவல்களைக் கூறிவந்தார்.

இதனால் சந்தேகம் கொண்ட அயலவர்கள் இது குறித்துக் கலாசாரம் பேணும் குழுவினரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் பிரஸ்தாப பெண்ணை கலாசாரம் பேணும் குழுவினர் மந்திகை வைத்திய சாலையில் அனுமதித்தனர். அங்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகள் மூலம் அவர் குழந்தையைப் பிரசவித்ததற்கான உடலியல் மாற்றங்கள் உறுதி செய்யப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தான் குழந்தையைப் பிரசவித்ததனையும், அதனை உயிருடன் புதைத்துவிட்டதனையும் அப் பெண் ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து கலாசாரம் பேணுவோரால் அப்பெண் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (33)

## விசாரணைக்கு நீதிமன்றம் கொண்டு வரப்பட்ட கணவனுக்கு கசிப்புக் கொடுத்த மனைவி

### 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

வழக்கு விசாரணைக்கெனக் சிறைச்சாலையிலிருந்து யாழ்.நீதி மன்றிற்கு அழைத்து வரப்பட்ட கணவருக்கு, களவாக கசிப்பைக் குடிக்க கொடுத்த மனைவி சிறைக் காவலர்களால் பிடிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.நீதி மன்றில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்ட மனைவி பின்னர் யாழ்.நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

யாழ். நீதவான் ஸ்டாலின் குமார் ரமணி எனும் குறித்த குடும்பத் தலைவி ஒருவயதுடைய குழந்தையொன்றின் தாய் என்பதனைக் கருத்தில் கொண்டு, 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த உத்தரவிட்டதுடன் அவரை எச்சரித்து விடுவித்தார். (27)



புதுக்குடியிருப்பு மாத்தளன் வீதியில் நீர் செல்வதற்காக வீதியின் இருமருங்கிலும் வடிகால் வெட்டப்பட்டுள்ளது. இவ் வடிகால்களில் நீர்செல்லாது குப்பை போடப்பட்டுள்ளதை படத்தில் காணலாம். (படம்:தவரட்ணம்)

## தாயகம் திரும்பினர்

தமிழ் நாட்டிலிருந்து மேலும் 16 ஈழத்தமிழ் அகதிகள் கடல் வழியாக புதனன்று தாயகம் திரும்பியுள்ளார்கள்.

வள்ளமொன்றின் மூலம் தலைமன்னார் வந்தடைந்த இவர்கள், பொலிசார் ஊடாக சொந்த இடங்களுக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

## குடமுறுட்டிப்பாலமூடாக பயணிகள் போக்குவரத்திற்கு அனுமதி

### - பார ஊர்திகளுக்குத் தடை

குடமுறுட்டிப் பாலம் மாரி காலத்திற்கு ஏற்ற வகையில் புனரமைக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது வேலைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதால் இனியும் காலந்தாழ்த்தாது பயணிகள் போக்குவரத்தை அனுமதிப்பது என வீதி அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானித்துள்ளது. எனவே இப் பாலமூடான பயணிகள் போக்குவரத்தை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 7ஆம் திகதி முதல் பயணிகள் பயணிக்கும் வாகனங்கள் (பேருந்து உட்பட)இதனூடாகப் பயணிக்க முடியும்.ஆனால் முடிந்தளவு பாலத்தினூடாகச் செல்லும் போது வெற்று வாகனமாகப் பயணிக்கவும், பார ஊர்திகளின் போக்குவரத்திற்கு இப் பாலம் மறு அறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

# சூழலையும், எம்மையும் பாதுகாப்போம்

அங்கவீனர்களாக பிறப்பதற்கு நாம் ஒருபோதும் விரும்ப மாட்டோம். ஒரு குழந்தை விகார தோற்றத்துடன் பிறப்பது பெற்றோருக்கும், குழந்தைக்கும் ஜீரணிக்க முடியாத ஒரு கவலையாகும். ஆனால், இன்று நீர்த்துளிகள் முதல் உணவு வாயு, சூரிய ஒளியீறாக மானுடப் பிறப்புக்களில் ஊனத்தை ஏற்படுத்தக் காரணமாகின்றன. அதிலிருந்து விடுபடுவது எவ்வாறு? நோயும் இறப்பும் மனித வாழ்க்கையில் நிச்சய மாகிறது.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் மனித ஆயுட்காலம் 30 வயதாக இருந்தது. எனினும் இலங்கையில் ஆயுட்காலம் 70 வயதாகும்.

நகர மயமாக்கலால் விலங்குகளினதும், மனிதர்களின தும் கழிவுகள் ஒழுங்காக அகற்றப்படாமை உருவானது. நீருக்காக வரிசை, மலசல கூடத்திற்கு வரிசை என்ற பிரச்சினை கள இன்னும் நகரங்களில் பேரிடியாகவுள்ளன. இதனால் நோய்கள் வேகமாகப் பரவுகின்றன. குறுகிய இடத்தில் கூடிய மக்கள் தொகை காணப்படுதல் எந்த மனித சூழலுக் கும் உயிரினங்களுக்கும் ஏற்படும் பெரும் அச்சுறுத்தலாகும்.

மேலும், குடியேற்றங்களும், கைத்தொழில் விருத்தியும் சூழல் மாசடைதலை ஊக்குவிக்கின்றன. வட அமெரிக்காவில் வெள்ளையினத்தவர் குடியேறியமை இதற்கு உதாரண மாகும். அதனால், அங்கு தீவிரமான நோய்கள் பரவத் தொடங்கின. வாந்திபேதி, அம்மை, வயிற்றோட்டம் போன்ற பல தொற்று நோய்கள் அதிகரித்தன. போதுமான நவீன வைத்திய வசதிகள் இல்லாத அக்காலத்தில் பெரும் எண் ணிக்கையானவர்கள் இறப்பைச் சந்தித்தனர்.

அதேபோன்று ஐரோப்பிய நாடுகளிலும் நோய்கள் பரவின.

இதேபோன்று எமது நாட்டிலும் பலர் பாதிக்கப்பட்டனர். இன்னும் பாதிக்கப்படுகின்றனர்.

தொழில்நுட்பங்களின் விருத்தியினால் சூழலில் கலக்கும் கழிவுகள் புகை மண்டலங்கள் என்பவற்றால் வளி மண்டலத்தில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவற்றுள் சல்பர் ஒக்சைட், ஹைட்ரோ காபன், காபன் தொனொச்சைட் என்பன தீமைவிளைப்பவையாகும். 1952ஆம் ஆண்டு இதனால், 4000 பேர் வரை உயிரிழந்தனர்.

வாகனங்களிலிருந்து வெளியாகும் காபன்மொனொக்சைட் வாயு இரத்தத்திலுள்ள ஈமோகுளோபினோடு சேர்வதால் இரத்தத்தில் ஒட்சியேற்றல் குறைவடைகிறது. இதய நுரையீரல் நோய்கள் ஏற்படுகின்றன.

இவை மட்டுமன்றி தாயின் வயிற்றில் வளரும் குழந்தை களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றன. இதன் காரணமாக சில குழந்தைகள் அங்கவீனர்களாகப் பிறக்க நேரிடுகிறது.

எதிர்காலத்தில் மனிதன் இயற்கைச் சூழலை மாசுபடுத்து வதைக் குறைக்கும்போதே மேற்கூறப்பட்ட ஆபத்துக்களி லிருந்து விடுபட முடியும்.

# பூத்ததும் இறக்கும் அதிசயப் பனைமரம்



தமிழ்நாட்டின் திருச்சியருகே அதிசயப் பனைமரங்கள் உள்ளன. இந்தப் பனைமரத்தின் சிறப்பு என்ன தெரியுமா? இது ஒரே ஒரு முறைதான் பூக்கும். கொத்துக் கொத்தாய் பூத்துக் காய்களை உதிர்த்ததும் அப்படியே பட்டுப் போய்விடும். இந்த வகையான பனைமரம் அது மண்ணில் முளைத்த நாளில் இருந்து பூப்பதற்கு சுமார் 80 ஆண்டுகள் ஆகும் என்கிறார்கள். இந்த அதிசய பனைமரத்தைப் பற்றி அறிந்தவர்கள். இந்தப் பனைமரத்தின் தாவரவியல் பெயர் கொர்ரிபா அம்பொ ராகூலிபரர் என்பதாகும். ஆங்கிலத்தில் தாலிபாட் பால்ம் என்றும் தமிழில் தாளிப்பனை என்றும் தாவரவியல் பற்றிய ஆராய்ச்சி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மரம் பூத்துக் குலுங்கும் போது குடைபோல் காணப்படுவதால் கிராமப் புறங்களில் இதனைக் குடைப்பனை என்றும் அழைக்கிறார்கள். பொதுவாக மலை அடி வாரங்களில் மட்டுமே காணப்படும் இந்தவகைப் பனைமரங்கள் நிலப்பகுதி களிலும் எங்காவது சில இடங்களில் அரியனவாக காணப்படுகின்றன. மலைப்பிர தேசங்களில் இதனுடைய வயது 40 வயது என்றால் சாதாரண நிலப்பகுதிகளில் 80 ஆண்டுகள் வரை உயிர்வாழ்ந்து இறுதியாகப் பூத்துக்காய்த்து அதன்பிறகு அப்படியே மடிந்து போய் தனது உயிரை விடுகிறது.



சூரியகாந்தி எண்ணெயில் இருந்து அதிகளவு ஐதரசன் ஆற்றலைப்பெற முடி யும் என்று சமீபத்தில் நடைபெற்ற ஆய் வில் கண்டறியப்பட்டுள்ளது. அதன் மூலம் கார் ஓட்ட முடியும்.

உலகமெங்கும் மாற்று எரிபொருள் மரபுசாரா எரிபொருட்கள் குறித்த விரி வான ஆய்வுகள் நடைபெற்று வருகின் றன. ஐதரசன் ஆற்றல் தற்போது அனைத்து தொழிற்துறையிலும் அதிகமான அளவில் பயன்படுத்தப்படுகின்றது.

ஆவர்த்தன வரிசை அட்ட வணையில் முதல் மூலகமான ஐதரசன் ஆற்றல் அதிகளவு திறன் உடையதாகக் கருதப்படுகின்றது. மற்ற ஆற்றல்களோடு ஒப்பிடுகையில் இது சுற்றுச் சூழலுக்கு ஏற்புடையதாக இருக்கின்றது என்பது இந்த ஆற்றலின் கூடுதல் அம்சமாகக் கருதப்படுகின்றது.

இந்த ஐதரசன் ஆற்றல் தற்போது ஆட்டோ மொபைல் துறையிலும் வீடுகள், தொழிற்சாலை மற்றும் அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகிறது.

அமெரிக்கன் இரசாயன அமைப்பு தற்போது ஐதரசன் ஆற்றலை அறிவியல் தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்தப்பட வேண்டும் என பரிந்துரை செய்துள்ளது.

சூரியகாந்தி எண்ணெயில் இருந்து பெறப்படும் ஐதரசன் ஆற்றல் மிகவும் மலிவானதாக இருக்கின்றது. மற்ற முறைகளில் ஐதரசன் ஆற்றலை உற்பத்தி செய்யும் போது கார்பன் மோனாக்சைடு, கார்பன் டையாக் சைடு, ஹைட்ரோ கார்பனான மீத்தேன் போன்ற வாயுக் களுடன் வினைப் பொருட்களாக உற்பத்தியாகின்றன. இந்த உடன் வினை பொருட்கள் சுற்றுச் சூழல் மாசு பாட்டை ஏற்படுத்தும் வாய்ப்புகள் மிகுதியாய் உள்ளன.

ஆனால், சூரிய காந்தி எண்ணெயில் இருந்து ஐதர சன் ஆற்றலைத் தயாரிக்கும்போது இத்தகைய மாசு படுத்தும் உடன் வினை பொருட்கள் தோன்றுவதில்லை.

தற்போது சூரியகாந்தி எண்ணெயை நேரடி எரிபொருட்களாகப் பயன்படுத்துவதைவிட அவற்றில் இருந்து ஐதரசன் ஆற்றலை உற்பத்தி செய்து அதனை எரிபொருளாகப் பயன்படுத்தும் முறை தற்போது பரவலாகி வருகின்றது.

# உலக அஞ்சல் தினம் ஒக்ரோபர் - 09



## “எல்லோருக்கும் எப்போதும் அஞ்சல் சேவை”

அஞ்சல் சேவையின் மகத்துவம் பற்றி உலகில் அறியாதவர்கள் மிகச் சிலராகத் தான் இருக்க முடியும். குக்கிராமங்களிலும், ஒற்றையடிப் பாதைகளிலும், யானைக் காடு களிலும், மலையேற்றப் பகுதிகளிலும் தின மும் செல்லக்கூடிய ஒருவராக அஞ்சலர் இருக்கின்றார். அதன் காரணமாகவே வெளி யுலகத்துடன் மக்களை இணைக்கின்ற பால மாக அவர் திகழ்கின்றார். அஞ்சலுக்கு மாற் றீடு இல்லையென்பது உண்மை. அது மட்டுமல்ல, “எல்லோருக்கும் எப்போதும் அஞ்சல் சேவை” என்பதே அஞ்சல் திணைக்களத்தின் மகுடவாசகமாகும். இந்த அற்புத சிந்தனையை உலக அஞ்சல் தின மாகிய இன்று நினைவு கூருவது சாலச் சிறந்ததாகும்.

உலகின் ஏனைய நாடுகளைப் போன்று அஞ்சல் சேவை இலங்கை மக்களுக்கும் சிறந்த சேவையாற்றி வருகின்றது. மக் களுடன் மிக நெருங்கிய உறவை அஞ்சல் சேவை கொண்டுள்ளது. புதிய சமூக மாற்றத்திற்கு ஏற்ற வகையிலும், சர்வதேச உலகமயமாக்கலுக்கு ஏற்ற வழிகளிலும், எமது தபால்சேவை நவீன மயப்படுத்தப்பட வேண்டியதும் துரிதப்படுத்தப்பட வேண்டி யதும் காலத்தின் கட்டாயமாகும். அஞ்சல் சேவை ஓர் அத்தியாவசிய சேவை. இச் சேவையின் முழுப்பலன்களையும் இந் நாட்டு மக்கள் நன்கு அனுபவித்து வரு கின்றார்கள்.

உலகம் சுருங்கி புதிய தொழில் நுட்பங்கள் விரிவுபடுத்தப்பட்டு வருகின் றன. குறுகிய வட்டத்துள் இருந்த அஞ்சல் சேவை இன்று அகலமாக, ஆழமாக விரி வுபடுத்தப்பட்டு உயரிய இடத்திலிருப்பது மிக மகிழ்ச்சியான ஒரு விடயமாகும். இரு நூறு வருடங்கள் பழமை வாய்ந்த எமது தபால் சேவை மிகவும் தரம் மிக்கதும், தனித்துவம் மிக்கதுமான அதேவேளை, துரிதமானதும், தூரதிருஷ்டி மிக்கதுமான தபால் சேவையாக மாற்றுவதே எமது அளப்பரிய பணியாகும். தற்போது தபாற் சேவை பல சிக்கல்களை எதிர்நோக்கு கின்றது. நவீனத்துவம் வாய்ந்த விஞ்ஞான விந்தைகள் நிறைந்த இன்றைய உலகில் அஞ்சலுக்குப் போட்டி ஏற்பட்டுள்ளது. இருப் பினும் அஞ்சலின் தரம் குறையவில்லை. என்றும் நாம் பேணும் இரகசியத் தன்மை எமது தபாலுக்கு முதன்மையைத் தருகின் றது. முக்கியத்துவத்தை அளிக்கின்றது.

மக்கள் மத்தியில் தபாற்சேவைக்கு இருக்கும் மகத்துவம் காப்பற்றப்பட வேண்டு மானால், நாம் புதிய விஞ்ஞான ரீதியிலான தேடுதல்களின் மூலம் புதிய யுக்திகளைக் கையாண்டு அஞ்சல் சேவையை மேம் படுத்த வேண்டும். இன்று நகர்ப்புறங்களில் சகல வசதிகளுடன் கூடிய தபாலகங்கள் உண்டு. ஆனால், கிராமப் புறங்களில் இதில தான் அஞ்சலின் வெற்றி தங்கியுள்ளது. இவ்வசதிகள் கிடையாது சகல வசதிகளும் கிராமப்புறங்களுக்கும் கிடைக்க வேண்டும். இதற்கு அரிய உயரிய புதிய தொழில் நுட்பங்களும் ஊழியர்களின் அர்ப்பணிப் புடனான ஆக்கபூர்வமான சேவையும் மிகமிக அவசியமா ம்.

ஒக்ரோபர் ஒன்பதாம் திகதி தோற்று விக்கப்பட்ட அஞ்சல் சங்கம் 189 நாடு களைக் கொண்டதாக தற்போது அளப் பரிய சேவையாற்றி வருகின்றது. மிகப் பெரிய அஞ்சல் வலையமைப்பின் மூலம் உலக நாடுகளை ஒன்று படுத்தி, உயரிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி, அஞ்சல் சேவையை விரிவுபடுத்தி, விரைவுபடுத்து வதற்கு அது தன்னாலான முயற்சிகளைச் செய் கின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும், வளர்ச்சியடையாத நாடுகளுக்கும் இடை யில் விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியிலான வேறுபாடுகள் காணப்பட்டாலும், உலக சனத் தொகையில் பெரும்பகுதி பௌதீக தபால் சேவையை (Ordinary Mail Service) நம்பியிருக்கின்றது. அஞ்சலின் தேவை வருடா வருடம் கூடிக் கொண்டே போகின் றது. இவ்வஞ்சல் சேவை இல்லையேல் தக வல்கள், கல்விச் சேவைகள், இலக்கியம், கலை என்பவற்றில் உயரிய கோட்பாடு களின் பரிமாற்றம் மிகவும் சீரழிந்து விடக்கூடும். சமூக ரீதியிலான சில சிக்கல் களையும் உருவாக்கக் கூடும்.

அஞ்சலுக்குத் தடையாகவுள்ள சகல விடயங்களையும் ஆராய்ந்த திரு. மொன்ட் கொமறி பிளயர் (Mont Gomery Blair) 1863 ஆம் ஆண்டில் ஒரு மாநாட்டைக் கூட்டி னார். இருப்பினும் அது வெற்றியளிக் காததால் ஐக்கிய வட ஜேர்மனியின் தபால் நிர்வாகத்தில் உரியவராகக் கருதப்பட்ட ஹென்றிச் வொன் ஸ்டீபன் (Genrich Von Stephen) என்பவர் 1874ஆம் ஆண்டு செப் ரெம்பர் மாதம் 15ஆம் திகதி ஒரு மாநாட் டைக் கூட்டினார். அதில் 22 நாடுகள் பங்கு பற்றின. அதன்படி அஞ்சல் சேவையின் அவ சியம் பற்றி ஆராய்ந்து ஒக்ரோபர் 9ஆம் திகதி 1978இல் சர்வதேச அஞ்சல் ஒன்றி யம் உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை ஒக்ரோபர் 9ஆம் திகதி சர்வ தேச அஞ்சல் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அஞ்சல் சேவையில் புரையோடிப் போன சட்ட திட்டங்களை மாற்றி கால னித்துவ வாதிகளால் உருவாக்கப்பட்ட விதி களை அகற்றி,பல புதுமைகளைச் செய்ய வேண்டும். அஞ்சல் சேவைக்குப் புத்துயிர் ஊட்டுதல் என்பது மக்களின் தேவை களை உணர்ந்து செயற்படல் எனப் பொருட்படவேண்டும்.காலத்திற்கு ஒவ்வாத விதிமுறைகளை ஞாலத்தில் அழித்திடல் அவசியம்.பாரதி சொன்னான் சந்திரமண்ட லத்தில் காலடி வைக்க வேண்டும் என்று. இன்று செயற்கை கோள் மூலம் செய்தி பரிமாற்றம் நடக்கிறது.

பழமை வாதம் களையப்பட வேண் டும்.அதேவேளை,கலாசார விழுமியங்கள் காப்பாற்றப்பட வேண்டும்.அவ்வகையில் அயராத முயற்சியும் தளராத துணிவும் கொண்டு, இத்திணைக்களத்தின் செயற்பாடுகளை வெற்றியடையச்செய்ய முனைவோம்.

சம்பந்தர் சிவராஜசிங்கம்,
மாவட்டஅஞ்சல் அத்தியட்சகர்,
யாழ்ப்பாணம்.



# வரலாற்றின் கண்காட்சி–03

நேற்றுடன் மூன்றாவது நாளாக கிளி.மத்திய மைதானத் தில் மக்கள் வெள்ளம் அலைமோதிக்





கொண்டிருந்தது. வெளி மாவட்டங்களிலிருந்தும் தம் குழந்தைகளை அழைத்தபடி பல பெற்றோர்கள் குடும்பங்க ளாக வந்துகொண் டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

குடும்பங்களாக வருபவர்களுக்குத் தமிழீழ காவல் துறையின் மகளிர் விவகாரப் பிரிவின் மாதிரிப் பணிமனை நல்ல பயனையே தரும். குடும்ப வன்முறை பற்றிய விழிப் புணர்வுக் கருத்துக்களைப் பெண் காவற்றுறையினர் அவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். சிறுவர்களின் உரிமை பற்றியும், அவர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பற்றியும் யாரும் விளக்க வேண்டிய தேவையே இல்லாமல் மிகத் தெளிவான கருத்துச் சித்திரங்களை வரைந்து வைத்திருக்கின்றார்கள். ஒரு குழந்தைகூட தெளிவாக விளங்கிக் கொள்ளுமளவிற்கு மிக எளிமையாக இருக்கின்றன அந்தப்படங்கள்.

" பெண்களும், குழந்தைகளும் பிரச்சினைகளை நாம் எப்படிக் கையாளுகின்றோம், பிரச்சினைகள் வராமல் தடுக்க என்ன நடவடிக்கைகளைச் செய்கின்றோம் என்பதை விளக்கவே, எமது மாதிரிப்பணிமனை ஒன்றைக் கண்காட்சிக்கென அமைத்து ,க்கின்றோம். இப் போது நாம் எல்லாவிதமான பணிகளையுமே செய்து வருகின்றோம். கொலை முறைப்பாடு



வந்தால் அதையும் கூட நாம் செய்கின்றோம். அதனால் பெண்களும், குழந்தைகளும்- பிரச்சினைகள் கவனிக்கப் படுவதற்கும், தீர்க்கப்படுவதற்கும் தாமதம் ஏற்படுகின்றது. எனவே இந்த இரு விடயங்களையும் சிறப்பாகக் கவனிப்பதற்கென தனியான பணிமனை ஒன்றை அமைக்கும் .திட்டம் எம்மிடம் உள்ளது. அதன்மூலம் பெண்களின் பிரச்சினைகளை இலகு வாகக் கையாளலாம்.'' என்று கூறிய காவல்துறை அதிகாரி மார் கிரட் அவர்கள், "தற்போது நாம் கிராமம் கிராமமாகப் பெண்க ளைத் திரட்டி விழிப்புணர்வுக் கருத்துக்களைக் கூறிவருகின் றோம். மாதர் சங்கங்களைச் சந்திப்பதைவிட, வயல்களில், தோட்டங்களில் வேலை செய்யும் பெண்களைக் கூட, அவர்களது 10 நிமிடத் தேநீர் இடைவெளிகளில் நான்கு, ஐந்து பேராகச் சேர்ந்து கருத்துக்களைக் கூறி வருகின் றோம்." என்றார் அவர். தமிழீழ காவல்துறையின் மகளிர் விவகாரப் பிரிவினர், தமது பதின் மூன்று (13) வருடகால சீரிய பணியாற்றிய ஆவணப்படங்களைப் பணிமனையில் பார்வைக்கு வைத்திருக்கின்றனர்.



**கிளி.இல் மகளிர் படையணிகளின்**
**மாபெரும் போரியல் வரலாற்றுக் கண்காட்சி**
**06.10.2004-10.10.2004 வரை**

அண்மைக்கால பாரிய பிரச்சினையான "விபத்து" பற்றிய புகைப்படங்கள் தனியான ஒரு பகுதியாக வைக்கப்பட்டுள்ளன.

" இவற்றைப் பாருங்கள் இனிமேல் வீதி ஒழுங்குகளைக் கவனியுங்கள்".

என்று வலியுறுத்துகின்றார். ஒரு உறுப்பினர். வருமுன் தடுப்போம்.

காவற்பணிமனைக்கருகே நீண்டு கிடக்கின்றது விடுதலைப் புலிகளின் மருத்துவமனை. இல்லாமைக்குள்ளிருந்து உயிர்த்தெழுந்த உச்சம். பல்லை X-ray படம் எடுக்கும் கருவியைக் காட்டிய அந்தப்பெண்போராளி,

" இந்தக்கருவியால் பல்லை மட்டுமல்ல, கை,கால் எழும்புகளைக்கூட X-ray எடுத்தோம்," என்றார். இருப்பதைக் கொண்டு உயிர் இருப்பைக் காத்தவர்கள் அவர்கள். பெருமை கொள்வோம்.




பற்களுக்கிடையிலே உள்ள மிகக்குறுகிய வெளிகளிலே தங்கி நின்று பற்களை நாசம் செய்பவைகளைத் துப்பரவாக்க Oral-B SATIN Floss என்ற இழைகளை முன்மொழிகின்றார்கள் இந்தப் போராளி மருத்துவர்கள்.

சாதாரணமாக நாம் பாவிக்கும் Signal, Clogard பற்பசைகளில் புளோரைட் இருப்பதாகவும், Colgate பற்பசையில் புளோரைட் இல்லை எனவும் விளக்கிய அந்தப் போராளி வைத்தியர், " நாங்கள் ஒவ்வொருவரும் எமது சூழலின் தண்ணீரின் இயல்புக்கேற்ற பற்பசைகளையே தெரிவுசெய்ய வேண்டும். எடுத்துக் காட்டாக, பூநகரியில் வாழும் ஒருவர் Signal ஐயோ, Clogard ஐயோ பாவிப்பாராயின், அவரது பற்கள் மஞ்சளாகி விடும். ஏனெனில் பூநகரி நீரில் புளோரைட் உள்ளது. எனவே அந்த மக்கள் புளோரைட் இல் லாத Colgate ஐயே பாவிக்க வேண்டும்." என்றார் அவர்.

இன்னும் அரிய தகவல்கள் ஏராளம் உண்டு. அவை நாளை வரும்.

## த.தே.கூட்டமைப்பினர் -மு.கா. சந்திப்பில் கால அட்டைவணை அடிப்படையில் பேச முடிவு

### திங்கள் பௌத்த பீடாதிபதிகளைக் கூட்டமைப்பினர் சந்திப்பர்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று பாராளுமன்றத்தில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இதில் இரண்டு தரப்பும் தமக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளும் வகையில் பேச்சுக்களை நடத்தின. இதன் இறுதியில் இரண்டு தரப்பும் கால அட்டவணையின் படி மீண்டும் சந்திப்பது எனத் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கநாதன் தெரிவித்துள்ளார். இந்தக் கால அட்டவணையைத் தயாரிப்பதற்காக இரண்டு தரப்பிலும் சுரேஸ் பிரேமசந்திரன் மற்றும் பசீர் சேகு தாவூத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் எதிர்வரும் திங்கட்கிழமையன்று மல்வத்த மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்களைச் சந்திக்கவுள்ளனர். இந்தச் சந்திப்பு கண்டியில் நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரம் தொடர்பில் தென்னிலங்கையில் எழுந்துள்ள முரண்பாடான கருத்துக்கள் குறித்து இங்கு ஆராயப்படவுள்ளன. (32)

## சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் விரைவில் இலங்கைக்கு வருகை

சுவிற்சர்லாந்தின் வெளிவிகார அமைச்சர் இலங்கைக்கு மிக விரைவில் விஜயம் செய்யவுள்ளார்.

இக்காலப்பகுதியில் இவர் சனாதிபதி சந்திரிகா,பிரதமர் ரணில் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## வழிப்போக்கரை மோதிவிட்டு ஓடிய உழவியந்திரம் எரிக்கப்பட்டது

### யாழ்.கோவில் வீதிப்பகுதியில் சம்பவம்

(நல்லூர்)

வழிப்போக்கரை மோதிவிட்டு ஓடிய உழவியந்திரத்தைக் கலைத்து வந்த இளைஞர் குழு அதனைத் தீயிட்டுக் கொழுத்தியதுடன் வீட்டையும் அடித்து நொருக்கி விட்டுச் சென்றுள்ளது.

கடந்தபுதன்கிழமை இரவு யாழ்ப்பாணம் கோவில்வீதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நாவாந்துறை பகுதியில் திருட்டு மணல் ஏற்றிவந்த உழவியந்திரம் வழிப்போக்கரை மோதிவிட்டு நிற்காது ஓடியதைத் தொடர்ந்து ஆத்திரமுற்ற இளைஞர்களே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். 41)

## ஜேர்மன் தேர்தல் முறையை அறிமுகப்படுத்த அரசு திட்டம்

இலங்கையில் ஜேர்மன் தேர்தல் முறையை அறிமுகப்படுத்தப் போவதாக அரசாங்கக் கட்சியின் பிரதம கொரடா ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார். நேற்று பாராளுமன்றதில் கருத்துரைத்த அவர், 50 வீதம் தொகுதி முறையையும் 50 வீதம் விகிதாசார முறையையும் கலந்த நிலையில் அதனை செயற்படுத்த அரசாங்கம் முனைந்துள்ளதாக தெரிவித்தார். இதன்போது தேசிய அடையாள அட்டை என்பது அவசியமானது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (32)

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
## நெடுஞ்சாலைகள் அமைச்சு

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (காப்)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
கடன் இல.2043/2044SRI (SF)

# கேள்விப் பத்திரம் கோரல்

01. ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ADV) கடனொன்றை இலங்கை அரசாங்கம் (GOSL) போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்திற்காக(CAARP) ("காப் திட்டம்" என இதன் பிறகு குறிப்பிடப்படும்) பெற்றுள்ளதுடன் கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வீதிகளின் புனரமைப்பு வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| ஒப்பந்த இலக்கம் | வீதிகளின் பெயர் | பகுதிகள் (km) | | தகுதியான ஏலம் கேட்போர் | கூறுவிலை பிணைப் பணம் (மில்லியனில்) |
|---|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | | |
| RDA/ADB/CAARP/LCB/CO2 | கண்டி-யாழ்ப்பாணம் வீதி | 165 | 176 | M3& மேல் | 2.0 |
| RDA/ADB/CAARP/LCB/CO3/A | கண்டி-யாழ்ப்பாணம் வீதி | 176 | 185 | M3& மேல் | 2.3 |
| RDA/ADB/CAARP/LCB/CO3/B | கண்டி-யாழ்ப்பாணம் வீதி | 185 | 193.6 | M3& மேல் | 2.3 |
| RDA/ADB/CAARP/LCB/CO4 | கண்டி-யாழ்ப்பாணம் வீதி | 290 | 300 | M4& மேல் | 2.0 |
| RDA/ADB/CAARP/LCB/CO6 | கண்டி-யாழ்ப்பாணம் வீதி | 310 | 320 | M3& மேல் | 2.4 |
| RDA/ADB/CAARP/LCB/C17 | மன்னார்-பூநகரிவீதி | 18.2 | 26.5 | M3& மேல் | 2.4 |
| RDA/ADB/CAARP/LCB/C23/A | மன்னார்-பூநகரிவீதி | 82 | 92 | M4& மேல் | 1.9 |
| RDA/ADB/CAARP/LCB/C23/B | மன்னார்-பூநகரிவீதி | 92 | 101.37 | M3& மேல் | 2.5 |
| RDA/ADB/CAARP/LCB/C07 | பரந்தன் -முல்லைத்தீவு வீதி | 0 | 10 | M3& மேல் | 3.1 |
| RDA/ADB/CAARP/LCB/C08/A | பரந்தன் -முல்லைத்தீவு வீதி | 10 | 15 | M4& மேல் | 2.0 |
| RDA/ADB/CAARP/LCB/C08/B | பரந்தன் -முல்லைத்தீவு வீதி | 15 | 21.5 | M4& மேல் | 1.7 |
| RDA/ADB/CAARP/LCB/C12/A | பரந்தன் -பூநகரி வீதி | 0 | 2 | M5-M7 | 0.3 |
| RDA/ADB/CAARP/LCB/C12/B | பரந்தன் -பூநகரி வீதி | 2 | 4 | M5-M7 | 0.3 |
| RDA/ADB/CAARP/LCB/C12/C | பரந்தன் -பூநகரி வீதி | 4 | 6 | M5-M7 | 0.3 |
| RDA/ADB/CAARP/LCB/C12/D | பரந்தன் -பூநகரி வீதி | 6 | 8 | M5-M7 | 0.3 |
| RDA/ADB/CAARP/LCB/C13/A | பரந்தன் -பூநகரி வீதி | 8 | 10 | M5-M7 | 0.3 |
| RDA/ADB/CAARP/LCB/C13/B | பரந்தன் -பூநகரி வீதி | 10 | 12 | M5-M7 | 0.3 |
| RDA/ADB/CAARP/LCB/C24 | திருகோணமலை-புல்மோட்டை வீதி | 0 | 7.5 | M3& மேல் | 2.7 |
| RDA/ADB/CAARP/LCB/C30 | திருகோணமலை-புல்மோட்டை வீதி | 47.5 | 55.23 | M3& மேல் | 2.1 |
| RDA/ADB/CAARP/LCB/C31/A | அக்கரைப்பற்று-சாகாமம் வீதி | 0 | 5 | M3& மேல் | 2.1 |
| RDA/ADB/CAARP/LCB/C31/B | அக்கரைப்பற்று-சாகாமம் வீதி | 5 | 10 | M4& மேல் | 1.9 |
| RDA/ADB/CAARP/LCB/C31/C | அக்கரைப்பற்று-சாகாமம் வீதி | 10 | 18.2 | M3& மேல் | 2.8 |
| RDA/ADB/CAARP/LCB/C32/A | அம்பிலாந்துறை-வீரமுனைவீதி | 0 | 8 | M3& மேல் | 2.5 |
| RDA/ADB/CAARP/LCB/C32/B | அம்பிலாந்துறை-வீரமுனைவீதி | 8 | 10 | M5-M7 | 0.3 |
| RDA/ADB/CAARP/LCB/C32/C | அம்பிலாந்துறை-வீரமுனைவீதி | 10 | 12 | M5-M7 | 0.3 |
| RDA/ADB/CAARP/LCB/C32/D | அம்பிலாந்துறை-வீரமுனைவீதி | 12 | 14 | M5-M7 | 0.3 |
| RDA/ADB/CAARP/LCB/C32/E | அம்பிலாந்துறை-வீரமுனைவீதி | 14 | 16 | M5-M7 | 0.3 |
| RDA/ADB/CAARP/LCB/C33/A | அம்பிலாந்துறை-வீரமுனைவீதி | 16 | 21.04 | M4& மேல் | 1.8 |
| RDA/ADB/CAARP/LCB/C33/B | அம்பிலாந்துறை-வீரமுனைவீதி | 21 | 26.7 | M4& மேல் | 1.7 |

- இலங்கை அரசின் சார்பாக நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றும் முகவராகச் செயற்படும்

02. தற்பொழுது பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ள உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் தலைவர், அமைச்சு கேள்விச்சபை, நெடுஞ்சாலைகள் அமைச்சு, முத்திரை பொறிக்கப்பட்டகேள்விப் பத்திரங்களுக்கு அழைப்பு விடுகின்றார்.

i. நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாணஒப்பந்தக்காரர் பதிவும், வீதி நிர்மாணத்துறையில் தரம் M7 அல்லது அதற்கு மேலுள்ள ஒப்பந்தக்காரராக கேள்விப்பத்திர அழைப்பு முடிவடையும் திகதிக்குமுன் குறைந்தது 14 நாட்கள் அங்கத்தவராகவும், எதிர்கால ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும்வரை தொடர்ந்து அங்கத்தவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரம் ஒன்றில் ஒப்பந்தக்காரர் மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்டிருப்பதோடு இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராகவும் இருக்கவேண்டும்.

ii. ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கத்துவ நாடுகளில் இருந்து வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்கள், மற்றும்.

iii. மேற்குறிப்பிட்ட (i) மற்றும் (ii) உள்ள தகுதியான வர்க்கத்தில் அடங்கும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களுக்கிடையில் இணைந்து செயற்படும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

- அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களாகவோ, இணைந்து செயற்படும் பங்காளிகளாகவோ, உப ஒப்பந்தக் காரர்களாகவோ காப் திட்டத்தில் பங்குபெறத் தகுதியற்றவர்களாவர்.

03. கேள்விப் பத்திரமானது பரிசீலனைக்காக நிதித்தகுதி, தொழில்நுட்பத் தகுதி மற்றும் அனுபவம் போன்ற தேவையான ஆவணங்களைக் கொண்டிருக்கும். அதேபோன்று நிதி சம்பந்தமான கேள்விப்பத்திரமும் வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரை பொறிக்கப்பட்ட நிலையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

உறைA - தொழில் நுட்பப் பிரேரணையானது கேள்வி ஆவணம் Volume IV வில் குறிப்பிடப்பட்ட படி சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட தகுதிகாண் வினாக்கள் ஊடாக அனுபவம், தொழில்நுட்பத் தகைமை மற்றும் நிதித்தகைமை சம்பந்தமான தகவல்களை கொண்டிருப்பவை முதலில் திறக்கப்படும் . அத்துடன் கேள்வி கோருவோரின் தகுதியும் பரிசீலனை செய்யப்படும்.

உறைB - வெற்றிகரமான தகைமைகளுக்கான பரிசீலனை செய்யப்பட்ட கேள்விகோருவோரின் நிதிப் பிரேரணைகளைக் கொண்டிருப்பவை மட்டும் மேலதிக பரிசீலனைக்காகத் திறக்கப்படும்.

04. கேள்விப் பத்திரத்தில் அடங்கும் தகைமைக்கான ஆவணம் கேள்வி கோருவோருக்கான அறிவுறுத்தல்கள், ஒப்பந்த நிபந்தனைகள், கட்டுமானப்பரிமாணங்கள், அளவுப்பட்டியல் மற்றும் வேறு தேவையான ஆவணங்கள் பார்வையிடுவதற்காக சாதாரண வேலை நேரங்களில் பணிப்பாளர், ஆசிய அபிவிருத்தி வங்கித் திட்டங்கள் பிரிவு, நெடுஞ்சாலைகள் அமைச்சு , 3ஆம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்லை என்ற முகவரியிலும், பிரதித்திட்டப்பணிப்பாளர், பி.எம்.யு, காப் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வதிவிடக்கோட்டம், காப் திட்டப்பணிமனை, கண்டிவீதி, வவுனியா என்ற முகவரியிலும், பிராந்தியப் பணிப்பாளர் காரியாலயம் (கிழக்குப்பிராந்தியம்) வீதி அபிவிருத்தி அதிகார சபை யாட்வீதி, மட்டக்களப்பு. (தொலைபேசி. 0652222479, 0652224443 தொலைநகல் 0652222479) என்ற முகவரியிலும் கிடைக்கும்.

05. கேள்விகோருவோர் மேலதிக தகவல்களுக்கும், விசாரணைக்கும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கும் சாதாரண வேலை நேரங்களில் 04.10.2004 முதல் 12.11.2004 திகதிவரை பணிப்பாளர் காரியாலயம், ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டப்பிரிவு, நெடுஞ்சாலைகள் அமைச்சு 3ஆம் மாடி செத்சிரிபாய, பத்தரமுல்லை என்ற முகவரியிலும் (தொலைபேசி: 0112865122, 0112862814, தொலைநகல் 0112865122, மின்னஞ்சல்: adb34 @sltnet.lk) மற்றும் பிரதித் திட்டப்பணிப்பாளர், பி.எம்.யு. காப்/ஆர்.என்.ஐ.பி. வீதி அபிவிருத்தி அதிகார சபை, வதிவிடக்கோட்டம், காப் திட்டப் பணிமனை, கண்டிவீதி, வவுனியா என்ற முகவரியிலும் பெற்றுக்கொள்ளமுடியும். (தொலைபேசி: 0242221458, தொலைநகல்: 0244589510, மின்னஞ்சல்:adba9@sltnet.lk) மற்றும் பிராந்தியப் பணிப்பாளர் காரியாலயம், (கிழக்குப் பிராந்தியம்) வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாட் வீதி, மட்டக்களப்பு என்ற முகவரியிலும் (தொலைபேசி:0652222479, 0652224443, தொலைநகல்: 0652222479) கிடைக்கும்.

06. முழுமையான கேள்விப்பத்திர ஆவணக்கொத்துகளை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்தில் இருந்து ரூபா ஐந்து ஆயிரம் (5000/=) மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யலாம்.

07. கேள்விகோருவோர் சகல ஒப்பந்தங்களையும் உள்ளடக்கும் பொதுவான கேள்விப்பத்திர பாதுகாப்பு ஆவணத்தினை முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பெறுமதியின் படி கீழ்க்காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய பெறுமானங்களுக்கு அமைவாக ஒரே நேரத்தில் அழைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களுக்கு, உறை Aயினுள் உள்ளடக்கலாம்.

| | | |
|---|---|---|
| ஒப்பந்தகாரர் தரம் M1&M2 | - | ரூபா 9 மில்லியன் |
| ஒப்பந்தகாரர் தரம் M3 | - | ரூபா 6 மில்லியன் |
| ஒப்பந்காரர் தரம் M4 | - | ரூபா 2 மில்லியன் |
| ஒப்பந்தகாரர் தரம் M5,M6&M7 | - | ரூபா 0.3 மில்லியன் |

சகல கேள்விகளும், மற்றும் கேள்விப் பாதுகாப்பு ஆவணங்களும், தலைவர், அமைச்சு, கேள்விச்சபை( அ.கே.ச.) நெடுஞ்சாலைகள் அமைச்சு 9ஆம் மாடி "செத்சிரிபாய", பத்தரமுல்லை என்ற முகவரிக்கு 15.11.2004 பி.ப.14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கட்டாயம் ஒப்படைக்கவேண்டும்.

கேள்விகோருவோர் அல்லது சார்பான பிரதிநிதிகளின் சமுகமளிப்புடன் உறை Aயினுள் உள்ளடக்கப்பட்டுள்ள சரியாகப் பூர்த்தியான தகுதிகாண் கேள்விக் கொத்து உடனடியாகத் திறக்கப்படும். கேள்வி கோருவோருடைய தகைமைகாண் மதிப்பீடு முடிவடையும் வரை உறை B திறக்கப்பட மாட்டாது.

(2ஆம் பக்கம் பார்க்க)

# கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தித்துறை

## தலைமைப் பணிமனை கிளிநொச்சி

Rural Economic Education Rearch
Development Orgnization
Head Office killinochchi



# VOCATIONAL TRAINING FORUM



கிராமிய பொருளாதார ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் (REERDO) ஒரு தசாப்த காலமாகத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வழிகாட்டலில் தமிழர் தாயகப் பகுதிகளில் தனது சேவையினை மேற்கொண்டு வருகின்றது. எமது தேசத்தில் போர் மேகங்கள் சூழப்பெற்று தமிழ் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் இருளில் முடங்கிய வேளைகளில் கல்விச் செயற்பாட்டிற்கு ஒளியினை ஏற்றவேண்டும் எனும் துடிப்புடன் இதுவரை காலமும் தனது சேவையினை மேற்கொண்டுவருகின்றது.

கிராமிய மட்டங்களில் தொழில் வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழிற் கல்வியினை ஏற்படுத்தி அவர்களுக்குத் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் இன்றைய தினம் அழைத்து கௌரவிக்கப்பெறவுள்ள மாணவர்களை வாழ்த்துகின்றேன். இவர்களின் உருவாக்கத்திற்கு அயரா துழைத்த தொழிற்பயிற்சி ஆசிரியர்களின் சேவைகள் பாராட்டுக்குரியன.

நகரங்களில் இருந்து நகர்ந்து கிராமங்களை நோக்கி சேவையினைப் பரவலாக்கும் எமது நிறுவனத்திற்கு அயராது உழைத்த ஆரம்பகாலப்பணிப்பாளர்கள், எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தோளோடு தோள் கொடுத்து உழைத்துவரும் திட்டஇணைப்பாளர்கள், பணியாளர்கள் ஆகியோரை நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

எமது நிறுவனச் செயற்பாட்டிற்கு நிதியுதவி நல்கிடும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம (T.R.O) , சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிதியம் (UNICEF), உலக கனேடியப் பல்கலைக்கழக சேவை (W.U.S.C) ஆகிய ஜப்பான் உறவுப்பாலம (B.A.J) நோர்வே அபிவிருத்தி நிதியம் (D.F), சர்வதேச தொழிலாளர் நிறுவனம் (I.L.O), புலம் பெயர்ந்தோர்க்கான சர்வதேச நிறுவனம் (I.M.O) என்பவற்றிற்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது சேவை மேலும் விரிவாகும் தமிழர் தாயகம் எங்கும் வியாபித்து நிற்கும் எனும் உறுதிமொழியுடன் பயணத்தினைத் தொடர்கின்றோம்.

செபஸ்ரியன் செல்வராஜ்
பணிப்பாளர் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு
அபிவிருத்தி நிறுவனம் (REERDO) ,நடுவப்பணியகம்,
கனகபுரம் ,கிளிநொச்சி

## தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் உள்ளத்திலிருந்து....



தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பங்காளி நிறுவனமாகிய கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி (REERDO) நிறுவனத்தால் ஆசிய ஜப்பான் உறவுப்பாலம் (B.A.J), உலக கனேடிய பல்கலைக்கழக சேவை (W.U.S.C) நிறுவனங்களின் நிதியுதவியில் நடாத் தப்பெற்ற தொழில்சார் பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்விற்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த கால போர் அனர்த்தங்கள், பாதிப்புக்களின் நிலையில் பல்வேறு வழிகளில் பாதிப்புற்ற மக்களின் கல்வி, மனித வள மேம்பாடுகளுக்காகக் கடந்த பலவருட காலமாக இத்தாயகத்தில் பல்வேறுபட்ட சிறப்பான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வரும் அரசசார்பற்ற நிறுவனமாகிய கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியன.

மானிட வாழ்வின் மேம்பாட்டிற்கு கல்வியும், தொழில் சார் பயிற்சியும் இரு கருவிகளாகவே அமைந்துள்ளன. இதன் அடிப்படையில் தொழிற கல்விப் பயிற்சியின் ஊடாக சமூகபொருளாதார நிலையை உயர்த்தக்கூடியனவாக தொழில்சார் பயிற்சித் திட்டங்களின் பயன்பாடு இன்று உலகளாவிய ரீதியில் இருந்து வருகின்றமை யாவரும் அறிந்ததே.

இதனை மையமாக வைத்துக் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமானது மாவட்ட மட்டங்களில் தனது பிரிவுகளை விரிவுபடுத்தி பல்வேறுபட்ட தொழில் சார் பயிற்சித் திட்டங்களை முன்னெடுத்து வரும் அதேவேளையில் இன்று சிறப்பாக (B.A.J), (W.U.S.C) நிறுவனங்களின் நிதியுதவியில் முன்னெடுக்கப்பட்ட தொழில் சார் பயிற்சித் திட்டங்களின் வெளிப்பாடு தேசத்தின் அபிவிருத்திக்கும் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களின் வாழ்க்கைத் தர உயர்வுக்கும் பெரிதும் உறுதுணையாக அமைந்துள்ளமை வரவேற்கக்கூடியதொன்றாகும்.

எனவே இன்றைய நாளில் கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமானது மேலும் பல சிறப்பான வேலைத்திட்டங்களை மாணவ சமூகத்திற்கும், தேசத்திற்கும் முன்னெடுப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தவும் தனது சேவையைச் சிறப்புடன் செய்யவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

கே. பி. றெஜி,
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்.

(சி.10571)

# ஆசிச் செய்தி

### 09.10.2004

## தேசத்தின் கட்டுமானத்துக்கு உழைக்க வாழ்த்துக்கள்



தேசத்தின் கட்டுமானத்துக்குத் துணைபுரியக் கூடிய விதத்தில் உழைப்பதற்காகப் பயிற்றப்பட்ட முந்நூறு இளைஞர்கள் இன்றைய தினம் கௌரவிக்கப்படுகிறார்கள். கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் இப்பயிற்சிகளை வழங்கியிருந்தது. இதற்குப் பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்கள் அனுசரணை வழங்கியிருந்தன.

போரால் சூழப்பட்ட எமது வாழ்வியலில் சிறுவர்கள் கல்வியையும், வாழ்வையும் தொலைக்க நேர்ந்தது. இவ்வாறான கல்வியை இடைநிறுத் திய மாணவர்களுக்கும், தொழிலற்ற இளைஞர்களுக்கும் தொழிற்கல்வியையும், பயிற்சியையும் வழங்கி அவர்களது எதிர்கால வாழ்விற்கு ஒளியூட்டும் நல்லதொரு திட்டத்தின் முதல் அறுவடையே இவர்களின் கௌரவிப்பு ஆகும். இதேவேளை இவர்களுக்குத் தொடர்ந்தும் பல்வேறு பயிற்சிகளும், அறிவூட்டலும் வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

1995 ஆம் ஆண்டு போரின் கெடுபிடியுள் எமது தேசம் சிக்கியிருந்த நேரத்தில் எமது மக்களின் கல்வியையும், பொருண்மியத்தையும் காக்கவும் மேம்படுத்தவுமென தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வழிகாட்டலில் பல்கலைக்கழக சமூகத்தினால் தொடங்கப்பட்டதே கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமாகும். 09 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் தனது இலக்கினை அடைய அந்நிறுவனம் பல்வேறு பணிகளை முன்னெடுத்து வருவது மகிழ்ச்சிக்குரியது.

தமது புதிய வாழ்வை தேசத்தின் கட்டுமானத்தில் தொடங்கவிருக்கும் இவ்இளைஞர்களை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன். அத்தோடு இப்பயன் மிகு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்திற்கும் அதற்கு அனுசரணை வழங்கிய தமிழர் புனர்வாழ்வுக்கழகம் (T.R.O), உலக கனேடிய பல்கலைக்கழக சேவை (W.U.S.C), ஆசிய ஜப்பான் உறவுப்பாலம் (B.A.J) உள்ளிட்ட அரச சார்பற்ற நிறுவனங்களிற்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சே. தங்கன்,
துணைப் பொறுப்பாளர்,
அரசியல் துறை,
தமிழீழம்.






## தொழில்திறன் விருத்தியில் உளப்பூரிப்புக்காய்....



கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்படும் உள்ளூர் அரசசாரா நிறுவனங்களில் ஒன்றான கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு (REERDO) அபிவிருத்தி நிறுவனம் 1995 இல் இருந்து எமது மாவட்டத்தில் கல்வியில் இடைவிலகியோரது நலனுக்காக பல்வேறு வகைகளில் உழைத்து வருவது கண்டு நான் மனம் மகிழ்கின்றேன். தொழில் சார் பயிற்சியை வழங்குவதன் ஊடாக சமூக உயர்வுக்கும் இளையோர்களின் மன உளைச்சலுக்குமுரிய ஆற்றுப் படுத்தலாகவும் புதிய திறன் களை உருவாக்குவதிலும் ஆற்றும் பணிகள் பாராட்டுக் குரியவை. அவ்வகையில் இன்று மேசன் தொழில், தச்சுத்தொழில், வீட்டுமின்சுற்றுப்பயிற்சி, பொருத்துனர் ஆகிய தொழில் சார் பயிற்சிகளில் 300 வகையான மாணவர்களுக்குரிய பயிற்சியை நிறைவுசெய்து உறுதிச்சான்றிதழ்களை வழங்குவதும் எமது மாவட்ட ஆளணியில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க திறன் விருத்தியைக் குறித்து நிற்கிறது. இதற்காக நிதியுதவி அளித்த சர்வதேச முகவர்களையும் பயிற்சிவழங்கிய ஆசிரியர்களையும் முகாமையையும் நன்றியோடு நினைவு கூர்ந்து என் உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

தி. இராசநாயகம்,
அரசாங்க அதிபரும்,மாவட்டச் செயலாளரும்,
கிளிநொச்சி மாவட்டம்.



இளைஞர், யுவதிகள் தமது வாழ்வை வளமாக்க மிகவும் முயன்றுகொண்டிருக்கும் இக்காலத்தில் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமானது (REERDO) அவர்களுக்கு வழிகாட்டி உதவ முன்வந்திருப்பது மிகவும் பாராட்டப்படவேண்டிய தொன்றாகும். இந்த வகையில் இன்று (09.10.2004) தொழிற்பயிற்சி பெற்றவர்களையும், பெற்றுக்கொண்டிருப்பவர்களையும் கௌரவிப்பதற்கான நிகழ்வை நடாத்துவதன் மூலம் இந்த நாட்டில் தொழிற் பயிற்சி பெற்ற ஓர் அணியினர் பற்றிய தகவல்களை வன்னிப் பிராந்தியத்தில் செயற்படும் சகல அரச அரசசார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் கவனத்திற்கும் கரிசனைக்கும் கொண்டு வர முயற்சித்துள்ளனர். இவ்வாறான நிகழ்வுகள் பல இனிமேலும் நடந்தேற வேண்டுமென வாழ்த்துகின்றேன். இந்நிகழ்ச்சியின் பெறுபேறாக தொழில் பயிற்சி பெற்றவர்கள் பொருத்தமான தொழிலைப்பெறவும், வாய்ப்பைப் பெறவும் வாழ்த்துகின்றேன்.

ரி. ஓய்சி.
திட்டமுகாமையாளர்,
ஆசிய-ஜப்பானிய உறவுப்பால நிறுவனம்;
கிளிநொச்சி.



கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் (REERDO) இன்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட தொழிற்பயிற்சி ஒன்றுகூடல் சிறப்புற நடைபெற எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.


2002 சமாதான சூழ்நிலைக்குப் பின்னர் எமது நிறுவனத்தின் நிதியுதவியுடன் தொழிற் பயிற்சிகளை நடாத்திய இந்நிறுவனம் இன்று பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களில் நிதியையும் பெற்று இம்மண்ணின் இளைஞர், யுவதிகளுக்குப் பல பயனான சேவைகளைச் சிறப்புற வழங்கி வருவது பாராட்டத்தக்கது. தொடர்ந்தும் இந்நிறுவனம் தனது சேவைகளைச் சிறப்புற வழங்க எமது வாழ்த்துக்கள்.


ப. சத்தியசீலன்
நிகழ்ச்சித்திட்ட அலுவலர்,
W.U.S.C, கிளி/முல்லை.

# "ஒன்றிணைவோம் சேவைபுரிவோம்"

## பெங்களூர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

# அவுஸ்.355 ஓட்டங்கள் முன்னிலையில்





பெங்களூரில் நடைபெற்று வரும் அவுஸ்திரேலிய இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இனிங்சில் 4 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முன்னதாக அவுஸ்திரேலியா முதல் இனிங்சில பெற்ற 474 ஓட்டங்களுக்கு பதிலளித்து தனது முதலாவது இனிங்சைஆரம்பித்த இந்திய அணி இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட்டுககளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நேற்றைய மூன்றாம் நாளில 246 ஓட்டங்களை பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து பொலோ-ஒன்னுக்குள்ளானது.

துடுப்பாட்டத்தில் பட்டேல் 46, பதான் 31, கும்ளே 26, ஓட்டங்களைப் பெற்று கௌரவமான ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச் சேர்த்தனர். பந்து வீச்சில் மெக்ராத் 4 விக்கெட்டுக்களையும், கஸ்பரோவிச்,கிளெஸ்பி, வோர்ன் தலா இரண்டு விக்கெட்டக்களையும் கைப்பற்றினர்.

அவுஸ்திரேலிய அணி இந்திய அணியை மீண்டும் துடுப்பெடுத்தாடும் படி பணிக்கும் வாய்ப்பிருந்தும் அதனைத் தவிர்த்து தனது இரண்டாவது இனிங்சை தொடர்ந்தது. இதன்போது ஓட்ட மெதுவும் பெறதா நிலையில் லாங்கரை இழந்தது.

தொடர்ந்து தட்டுத் தடுமாறிய அவுஸ்திரேலியா 4 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களை பெற்றிருந்தது. இதன்மூலம் இந்திய அணியை விட அவுஸ் அணி 355 ஓட்டங்கள் முன்னிலையில் திகழ்கின்றது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## மகளிர் கால்பந்துப் போட்டி மன்னாரை வீழ்த்தியது முல்லை




இரண்டாம் லெப்டினனட் மாலதி நினைவாக மாவட்ட மகளிர் அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டி நேற்று கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

முதலாவது போட்டியில் முல்லைததீவு மாவட்ட அணி மன்னார் அணியை எதிர்த்தாடியது.

இதில் முல்லைத்தீவு அணி 4-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இப்போட்டிக்குப் பிரதம நடுவராக க.புவனேந்திரராஜாவும், பக்க நடுவர்களாக சிவலிங்கம், சிவனேசன் ஆகியோரும் கடமையாற்றினர்.

இன்று காலை 9.00 மணிக்கு திருமலை மாவட்ட அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட அணியும், மாலை 4.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து முல்லை மாவட்ட அணியும் இதே மைதானத்தில் மோதவுள்ளன.

இறுதிப்போட்டி நாளை மாலை 3.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. (தீ,ச)




## 400 விக்கெட் வீழ்த்திய கும்ளேக்கு கர்நாடகத்தில் வித்தியாசமான வரவேற்பு



டெஸ்ட் கிரிக்கெட்டில் 400 விக்கெட் வீழ்த்திய அனில் கும்ளேயை கர்நாடக கிரிக்கெட் சங்கத்தினர் நேற்று வித்தியாசமாகக் கௌரவித்தனர். தேநீர் இடைவேளையின் போது கர்நாடக கிரிக்கெட் சங்கப் பிரமுகர்கள் மைதானத்தில் அணி வகுக்க... உள்ளே வந்தார் அனில் கும்ளே. 400 விக்கெட் சாதனையைப் பாராட்டி அவருக்குச் சிறப்புப் பரிசு மற்றும் 400 ஆவது விக்கெட் வீழ்த்திய பந்து வழங்கப்பட்டது.

அனில்கும்ளேக்கு பரிசு வழங்க அழைக்கப்பட்டவர்... அவரது அம்மா சரோஜா கும்ளே. கிரிக்கெட் ரசிகர்களுக்கு இவர் பரிச்சயமானவர். பெங்களூரில் நடக்கும் போட்டிகளைத் தவற விடமாட்டார். தொலைக்காட்சியில் அடிக்கடி பார்த்திருக்கலாம். அன்பு மகனுக்கு கிண்ணத்தை வழங்கிய சரோஜா கும்ளேக்கு அதைவிட அருமையான பரிசம் வழங்க மறக்கவில்லை.

உயரமான அனில் கும்ளேயை இழுத்து அணைத்து இருகன்னங்களிலும் மாறி மாறி முத்தங்கள் வழங்க அருகில் அனிலின் மனைவி அதை ரசிக்க... ஓட்டுமொத்த அரங்கமும் கைதட்டி வாழ்த்த... கிரிக்கெட் வாழ்க்கையில் அனிலின் உன்னதமான தருணம் அது!.

## கிளார்க் அபார துடுப்பாட்டம் டரன் லீமறுக்கு ஆபத்து



'கிளார்க் சதம் அடித்ததன் மூலம் மூன்றாவது டெஸ்டில் டரன் லீமன் இடம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவு' என கூறுகிறார் வோல்டர்ஸ்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் டெஸ்ட் வீரரான வோல்டர்ஸ் நேற்று முன்தினம் வானொலி நிகழ்ச்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் "மைக்கேல் கிளார்க் மிகச் சிறந்த வீரர். 23வயதான இவர் தனது முதல் போட்டியிலேயே சதம் அடித்தது பாராட்டுக்குரியது. ஒருநாள்போட்டிகளில் சிறப்பாக ஆடிவரும் இவர் எப்போதே டெஸ்ட் அணியிலும் இடம் பெறவேண்டியவர். அவுஸ்திரேலிய தேர்வுக்குழு இவரை தாமதமாக அடையாளம் கண்டுள்ளது. என்று தான் கூற வேண்டும்.

ரிக்கி பொண்டிங்காயம் காரணமாக அணியில் இடம் பிடித்தவர் கிளார்க். தற்போது பொண்டிங் காயத்திலிருந்து குணமடைந்து வருகிறார். இதனால் நாக்பூரில் நடக்கும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இவர் அணிக்குத் திரும்புவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இவருக்குப் பதிலாக அணியில் இருந்து நீக்கப்படுவது யார் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

கிளார்க் முதல் போட்டியில் சதம் அடித்துள்ளதால் அனுபவ வீரரரான ல்மனின் இடத்தை இவர் பிடிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன என்றார்.




## கால்பந்து தரவரிசை பிரேசில் முதலிடத்தில்

கால்பந்து தரவரிசைப் பட்டியலில் இந்தியா 138 ஆவது இடத்தைப் பெற்றது. சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பீபா) புதிய தரவரிசைப் பட்டியலை நேற்று முன்தினம் அறிவித்தது. இதில் இந்தியா 335 புள்ளிகளுடன் தொடர்ந்து 138 ஆவது இடத்தில் உள்ளது. பிரேசில் 845 புள்ளிகளுடன் முதல் இடத்தையும், பிரான்ஸ் 799 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும் தக்கவைத்துள்ளன. நான்காவது இடத்தில் இருந்த ஆர்ஜென்டீனா மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. ஸ்பெயின் நான்காவது இடத்திற்குப் பின்தங்கியுள்ளது.

கடந்த செப்ரெம்பர் 8இல் கல் கத்தாவில் நடந்த உலகக் கோப்பை தகுதி கால்பந்து போட்டியில் இந்திய அணி 0-4 என்ற கோல் கணக்கில் ஜப்பானிடம் தோல்வி அடைந்தது. இதையடுத்து இந்திய அணி இன்று குவைத்தைச் சந்திக்கிறது.

## உலகக்கோப்பையைக் கைப்பற்றுவதே எனது இலட்சியம்-டெண்டுல்கர்



உலகக் கோப்பையைக் வெல்ல வேண்டும் என்பதே என்னுடைய இலட்சியம் என்று டெண்டுல்கர் கூறியுள்ளார்.

முழங்கை வலி காரணமாக கடந்த 7 வாரமாக அவதிப்பட்டு வரும் இந்திய கிரிக்கெட் நாயகன் சச்சின் டெண்டுல்கர் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் கலந்துகொள்ளவில்லை. இதன் காரணமாக டெண்டுல்கர் தற்போது எடைகுறைந்த மட்டையில் பயிற்சி செய்து வருகிறார். முதல் டெஸ்ட் போட்டிக்கான அணியில் இடம்பிடித்த டெண்டுல்கர் கடைசிநேரத்தில் உடல்தகுதி சோதனையில் தேறவில்லை. இதுகுறித்து அவர் நிருபர்களிடம் கூறுகையில்; எடை குறைந்த மட்டை பயன்படுத்துவதால் என்னுடைய வலியில் பெரிய மாற்றம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை; ஏற்கனவே நான் இதே மாதிரியான சோதனையில் ஈடுபட்டேன். ஆனால் சரியான பலன் கிடைக்கவில்லை. பலமுறை முயற்சி மேற்கொண்டும் என்னால் உலகக் கோப்பை வெற்றியை ருசிக்க முடியவில்லை. தென் ஆபிரிக்காவில் நடந்த போட்டியின் போது ந்த வெற்றி கடைசியில் நழுவியது. உலகக் கோப்பையைக் கைப்பற்ற வேண்டும் என்பதே என்னுடைய இலட்சியம் என்றார்.




## மீண்டும் போட்டிகளில் கிளிஸ்டர்ஸ் பங்கேற்பார்

உலகின் முதல்தர டென்னிஸ் வீராங்கனையான கிம் கிளிஸ்டர்சின், 'மணிக்கட்டில் காயம் காரணமாக போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவார்' என்ற கவலையைப் போக்கியுள்ளார்.

அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு பாரதூரமான காயம் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. 21 வயதான கிளிஸ்டர்சிற்கு இரண்டு முறை காயமேற்பட்டதால் இனிப் போட்டிகளில் விளையாடமாட்டார் என எதிர்பார்க்கப்பட்டது. அவர் மீண்டும் போட்டிக்குத் திரும்புவார் என அவரது வைத்தியர் தெரிவித்துள்ளார். தர வரிசையில் 7ஆம் இடத்தில் இருக்கும் இவர் கடந்த விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் தொடரின் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்தார்.

அடுத்த பெப்ரவரியில் அவர் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த டென்னிஸ் வீரர் லேய்ரன் கெவிட்டை திருமணம் செய்யவுள்ளார்.

## முன்னோடி கராத்தேப் போட்டிகள் மாவட்ட ரீதியில் ஆரம்பம்



ஈழப்பிரியா ஞாபகார்த்த கராத்தேப் போட்டியின் முன்னேற்பாட்டு நடவடிக்கையாக மாவட்ட ரீதியாக கராத்தேப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கராத்தே சுற்றுப் போட்டி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட கராத்தே சங்கத் தலைவர் விஜயராஜ் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை மணிரத்தினம் ஏற்றி வைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா சிறப்புரை நிகழ்த்தினார். மேற்படி கராத்தே சுற்றுப் போட்டியில் நூற்றிக்கும் மேற்பட்ட கராத்தே வீரர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## உதயசூரியன் வி.கழகம் நடாத்திய கால் பந்துப்போட்டி

## பாரதி வி. கழக அணி சம்பியனானது



வத்திராயன் உதய சூரியன் வி.கழகம் வருடாந்தம் நடாத்தும் உதைப் பந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் இறுதிப் போட்டி நிகழ்வு கடந்த 27.09.2004 அன்று உதயசூரியன் வி.க. மைதானத்தில் நடைபெற்றது. 18 கழகங்கள் பங்கேற்ற இப் போட்டிகளில் இறுதிப் போட்டிக்கு உடுத்துறை பாரதி வி.க.உம், உடுத்துறை செந்தமிழ் வி.க. உம் தெரிவாகியது. இப்போட்டிகளை கடற்புலிகளைச் சேர்ந்த மோகன் வடமராட்சி கிழக்கு, காவல் துறைப்பொறுப்பதிகாரி சிவகுமார், கடற்புலிகளின் கரையோரப் பாது காப்புப் பிரிவுப் பொறுப்பாளர் அண்ணாத்துரை, நிதித்துறையைச் சேர்ந்த கி.தாயகன், புகழேந்தி, கடற்புலி சுதர்சன் ஆகியோருக்கு வீரர்கள் அறிமுகஞ் செய்யப்பட்டனர். பின்னர் போட்டி ஆரம்பித்து வைக் கப்பட்டது. ஆரம்பம் முதலே போட்டி விறுவிறுப்பாக எல்லோரும் எதிர் பார்த்தது போல் அமைந்திருந்தாலும் போட்டிகள் இடைவேளைக்கு முன்பு பாரதி வி.க ஒருகோல் போட்டு தனது வெற்றியை உறுதிப படுத்திக் கொண்டது. மீண்டும் இடைவேளைக்குப் பின் மேலும் 3கோல் களைப் போட்டு 4 என இலகுவான வெற்றியை பாரதி வி.கபெற்றது. இச்சுற்றுப்போட்டிகளில் பிரதான நடுவராக யாழ்/ மருதங்கேணி இ.த.க பாடசாலை அதிபர் ம.நவநீதம்ணி கடமையாற்றினார். சிறந்த விளையாட்டு வீரராக பாரதி வி.க வீரராக் ஜெயசுதாகர் தெரிவு செய்யப்பட்டார். வெற்றிக் கிண்ணங்களையும், பரிசில்களையும் அண்ணாத்துரை, சுதர் சன், கடற்புலிகளின்தளபதி பா. மங்களேஸ், வடமராட்சிக் கிழக்கு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி குணவிழி ஆகியோர்கள் வழங்கினார்கள். (தீ)

## சிந்தனைக்கு



எனது மக்கள் பற்றியும், எனது தேசம் பற்றியும், எனது இயக்கம் பற்றியும் நான் பெருமிதம் கொள் கின்றேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 09-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## முரண்பாட்டை வலுவாக்கச் சதி !

தமிழீழ கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களின் செயற்பாடானது இலங்கைத் தமிழ் மக்களினதும் – தமிழக மக்களினதும் வரலாற்று ரீதியிலான நட்புறவிற்கும், உறவிற்கும், கலாசார ரீதியிலான தொடர்பிற்கும் ஊறுவிளைவிக்கும் வகையில் அரசியல்வாதிகளால் வளர்த்தெடுக்கப்படும் ஒன்றாகியுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கும், இந்தியாவிற்கும் இடையில் பாதிப்படைந்துபோயுள்ள உறவில் எந்தவித மாற்றமோ, முன்னேற்றமோ ஏற்படுவதைச் சிங்கள ஆட்சியாளர்களும், அதன் ஆயுதப் படையினரும் விரும்பவில்லை. இதற்கு அவர்கள் எத்தகைய வழிமுறைகளையும் கையாளத் தயாராகவே உள்ளனர்.

கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக சிறிலங்கா ஆட்சியாளர்கள் இந்தியாவிற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான உறவு நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுவிடாத வகையில் தொடர்ந்து இராஜீக ரீதியில் செயற்பட்டு வருகின்றமை வெளிப்படையானது. ஒரு வகையில், வரலாற்றிற்கு முரணாக சிங்கள தேசம் இந்தியாவின் நண்பன் எனக் காட்டிக்கொள்ள முற்பட்டு நிற்கின்றது. மறுபுறத்தில், விடுதலைப்புலிகளுக்கும் – இந்தியாவிற்கும் இடையிலான உறவு நிலை மோசமடையச் செய்யும் வழி வகையைச் செய்யவும் முற்பட்டு நிற்கின்றது.

இராஜீக ரீதியில் இத்தகைய அணுகுமுறையுடன் செயற்படுகையில், மற்றொருபுறம் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு – குறிப்பாக, தமிழக மீனவர்களுக்கும் – இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கும் இடையில் முரண்பாட்டை வளர்க்கவும், இதன் மூலம் தமிழகத்திற்கும் – தமிழீழத்திற்குமான உறவில் விரிசலை ஏற்படுத்தும் வகையிலும் செயற்படமுற்பட்டது.

கடந்த காலத்தில் தமிழக மீனவர்களுடன் நேரடியாகப் பகையுணர்வைக் காட்டிய சிறிலங்காக் கடற்படையினர் மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், தாக்கியும், படுகொலை செய்தும் வந்தனர். ஆனால், அரசியல் ரீதியில் இந்தியாவுடன் நெருக்கமான உறவு ஏற்பட்டதைத் தொடர்ந்து சிறிலங்கா ஆயுதப் படையின் தாக்குதல் நடவடிக்கைகள் குறைக்கப்பட்டன ; நிறுத்தப்பட்டன.

இதேவேளை, தமிழக மீனவர்களுக்கும், இல. தமிழ் மீனவர்களுக்கும் இடையில் விரிசலை ஏற்படுத்தும் நோக்கில் இலங்கைக் கடற்பரப்பிற்குள் தமிழக மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிக்க மறைமுகமாக அனுமதித்தனர். இது தமிழக மீனவர் மத்தியிலும், இல. தமிழ் மீனவர் இடையேயும் சில வேளைகளில் நேரடி முரண்பாடுகளுக்கு வழிவகுத்தது. இந்நிலையில், ஏற்பட்ட சில கசப்பான சம்பவங்களுக்கு விடுதலைப்புலிகளே காரணம் எனச் சிறிலங்கா அரசு பிரச்சாரம் செய்ய முற்பட்டது. இதன் மூலம் தமிழக மக்கள் மத்தியில் இருந்தும் புலிகளை அந்நியப்படுத்த அது முனைந்தது.

இதன் தொடர் நடவடிக்கையாகவே தற்பொழுது புலிகளின் பெயரில் தமிழக மீனவர்களை மிரட்டும் வகையில் சிறிலங்கா கடற்படை விநியோகித்த கடிதமாகும். அதாவது, எல்லை மீறிவந்தால் படகுகள் தீயிட்டுக் கொழுத்தப்படும் என வழங்கிய கடிதமாகும்.

ஆனால், சிறிலங்கா கடற்படையின் இச்செயற்பாடானது, சிறிலங்கா அரசின் மீதும், அதன் கடற்படையின் மீதுமான அவநம்பிக்கையை வளர்ப்பதற்கு உதவக்கூடியதே ஒழிய விடுதலைப்புலிகளுக்கும், தமிழக மீனவர்களுக்கும் இடையிலான அவநம்பிக்கையை வளர்க்க உதவப் போவதில்லை.

இதனைத் தமிழக மக்கள் நன்கே புரிந்துகொண்டுள்ளனர். அவர்கள் கடந்த இரு தினங்களில் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ளனர். அதாவது, விடுதலைப்புலிகளுக்கும் அண்மைக் காலச் சம்பவங்களுக்கும் தொடர்பு இல்லை என அவர்கள் உறுதியாக நம்புகின்றனர்.

ஆனால், சிங்கள அரசியல்வாதிகள் போன்றே தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும் அண்மைய சம்பவங்களுக்கும் புலிகளுக்கும் இடையில் தொடர்பிருப்பதாக குற்றம் சாட்ட முற்பட்டு நிற்கின்றார். ஆனால், இக்குற்றச்சட்டானது அரசியல் நோக்கத்திற்கானது மட்டுமே என்பதை இந்திய மத்திய அரசு புரிந்து கொள்ளுதல் வேண்டும். அதுவே நன்மை பயக்கக் கூடியதாகும்.

தமிழீழக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிப்பது என்பது சட்டத்தை மீறும் ஒரு செயலே ஆகினும், அதனைப் பேசித் தீர்த்துக் கொள்ளவே தமிழக மீனவர்களும் இலங்கை வடபகுதி மீனவர்களும் விரும்புகின்றனர். இதில் விடுதலைப்புலிகள் எந்தவித தலையீட்டையும் செய்யவில்லை. ஆனால், சிங்கள அரசியல்வாதிகளும், சில தமிழக அரசியல் தலைவர்களும் இதனை அரசியலாக்கி ஆதாயம் தேடப் பார்க்கின்றனர். இனப்பிரச்சினையுடன் இதனைத் தொடர்பு படுத்த விளைகின்றனர். இதனை மத்திய அரசு இனங்காணத் தவறுமேயானால் இப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்குப் பதிலாக பதட்டத்தை அதிகரிக்க வழிவகுப்பதாகவே இருக்கும்.

# அநுராவின் பொறுப்பிலிருந்த இரு அமைச்சுக்கள் பிரிப்பு

(கொழும்பு)

தொழில் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சின் பொறுப்பில் இருந்து சுற்றுலாத்துறையை விடுவிக்கும் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை சனாதிபதி வெளியிட்டுள்ளார். இந்த வர்த்தமானி அறிவித்தல் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. தற்சமயம் இந்த அமைச்சை அநுரா பண்டாரநாயக்க வைத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் குறிப்பிட்ட வர்த்தமானியில் தொழில் மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றுக்கான திணைக்களங்கள் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டுள்ளன இதேவேளை தோட்ட உட்கட்டமைப்புத் துறை அமைச்சுடன் தோட்ட வீடமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சு என்ற ஒரு விடயம் சேர்க்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இதுவரை காலமும் தோட்ட வீடமைப்பைக் கொண்டிருந்த அமைச்சர் பேரியலின் பொறுப்பில் இருந்த தோட்ட வீடமைப்பு அமைச்சு முத்து சிவலிங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது. இதற்கிடையில் அமைச்சர் சி பி ரட்நாயக்கவுக்கு தற்சமயம் வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பொறுப்பைப் பொறுத்த மட்டில் அவரின் பணிகள் யாவும் நுவரேலியா மாவட்டத்துக்குள்ளேயே வரையறுக்கப்பட்டுள்ளன. (32)

# வாக்களிப்பின் போது அடையாள அட்டையை பயன்படுத்தும் பிரேரணை நிறைவேற்றம்

## தமிழ்க் கூட்டமைப்பினர் வெளிநடப்பு

திருத்தங்களுடன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட, தேர்தலின் போது அடையாள அட்டைகளைப் பயன்படுத்தும் விசேட பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது. எனினும் பரீட்சார்த்த ரீதியாக நடத்தப்பட்ட வாக்கெடுப் பின் போது பிரேரணைக்கு ஆதரவாக 192 வாக்குகள் கிடைத் தன. இதன் போது அரசாங்கம் இந்தப் பிரேரணையில் மேற் கொள்ளப் பட்ட திருத்தங்களில் மேலும் திருத்-தங்களைக் கொண்டு வர முயற்சிப்பதாக குற்றம் சுமத்தி, தமிழ்த் தேசிய கூட்ட மைப்பினர் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்

தமிழ் மக்களின் சார் பில் தாம் பாராளுமன்றத்துக்கு வந்ததன் காரணம் தமிழ் மக்க ளின் உரிமைகளை வென்றெடுப் பதற்காகவே என அவர்கள் தெரிவித் தனர் .இதேவேளை நேற்று முன்தினம் பாராளு மன்றத்திற்கு அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த 32 உறுப்பினர்கள் சமுகமளித் திருக்கவில்லை எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. நேற்று நிறை வேற்றப்பட்ட பிரேரணையின் அடிப்படையில் தேர்தல் ஆணையகம் வாக்காளர்கள் அனைவரும் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுள்ளதாக உறுதிப்படுத்திய பின்னரே பிரேரணை சட்டமூலம் என்ற வலுவைப் பெறும் என்பது குறிப் பிடத்தக்கது . (32)

# அனைவரிடமும் அடையாள அட்டை இல்லாத நிலையில் தேர்தலுக்கு அதனை அவசியமாக்குவது தவறு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் செயலாளர் சம்பந்தன்

(லண்டன்)

நாட்டில் உள்ள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த பின்னர் தேர்தலில் அடையாள அட்டை பயன்படுத்தப்படுவது தொடர்பான சட்டமூலத்தைக் கொணடு ·வரலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் இரா சம்பந்தன் கூறியுள்ளார்.

தேர்தலில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை பயன்படுத்துவதற்கான சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டதை அடுத்து லண்டன் பி.பி.சிக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் சுமார் 35இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களிடம் அடையாள அட்டை இல்லை. குறிப்பாக மலையக மக்கள், வடக்கு கிழக்கு இடம் பெயர்ந்த மக்கள், விசேடமாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலுள்ள மக்களிடம் அடையாள அட்டைகள் இல்லை. எனவே சட்ட மூலம் கொண்டு வருவதற்கு முன்னர் நாட்டில் உள்ள அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறியுள்ளோம் என்றார் .

# ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட கைதி மேன் முறையீட்டு நீதிமன்றால் விடுதலை

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் ஆயுள் தண்டனை விதிககப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவரை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் விடுதலை செய்தது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மயில்வாகனம் விஜயரட்ணம் என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவராவர். 2002 ஆம் ஆண்டில் இவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டு இவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு கட்டுமுறிப்பு என்ற இடத்தில் வைத்துத் தாக்குதல் நடத்தி, படையினரின் உயிரிழப்புக்குக் காரணமாக இருந்ததாக இவர் மீது சட்டமா அதிபர் குற்றம் சுமத்தியிருந்தார். எனினும் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் மயில்வாகனம் விஜயரட்ணத்தை விடுதலை செய்தது. (32)

# ஐ.தே.க.வில் இணையப்போவதாக திலக் கருணாரத்ன அறிவிப்பு

சிஹல உறுமயக் கட்சியின் ஸ்தாபகத் தலைவரான திலக் கருணாரத்ன மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையப் போவதாக அறிவித்துள்ளார்.

ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து 1995 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட இவர்- பின்பு அக் கட்சியிலிருந்து விலகி பௌத்தத்தையும் சிங்களத்தையும் பாதுகாக்கப் போவதாகக் கூறி பௌத்த பேரினவாதக் கட்சியான சிஹல உறுமயவை 1998 ஆம் ஆண்டு ஆரம்பித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஹெல உறுமய கட்சியில் போட்டியிட்ட பௌத்த பிக்குமார்கள் 9 பேர் வெற்றி பெற்றதையடுத்து தற்போது அக்கட்சி ஜாதிக ஹெல உறுமயவாக இயங்குகின்றது. பௌத்த சிங்களப் பேரினவாதப் போக்குடைய திலக்கருணாரத்ன கடும் இனவாதி என பல்வேறு தரப்பினராலும் விமர் சிக்கப்பட்டு வருபவர்.

இவரது இந்தத் திடீர் மனமாற்றத்திற்குக் காரணம் ஜாதிக ஹெல உறுமயவிலுள்ள பௌத்த பிக்குமார்கள் இவரை ஓரங்கட்டி விட்டமையே எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# திருமலை விஜயம்

சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவும் மற்றும் படை உயர் தலைவர்களும் நேற்று திருகோணமலைக்குச் சென்று விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட இரண்டு ஊர்காவல் படையினரை விடுவிக்கும் முகமாக உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் வடக்கு கிழக்கு சிங்கள அமைப்பினருடன் கலந்துரையாடினர். பின்னர் அவர்கள் திருகோணமலையின் இராணுவ கட்டளைத் தளபதியைச் சந்தித்து மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமையைக் கேட்டறிந்து கொண்டனர். இதேவேளை இந்த விடயம் தொடர்பாக அவர் நேற்று மாலை மதத்தலைவர்களைச் சந்தித்துப் பேசினர். (25)

# புதையுண்டு மரணம்

இரத்தினபுரி குருவிட்ட பகுதியில் மாணிக்கக்கல் அகழும் பணிகளில் ஈடுபட்டிருந்த இருவர் மாணிக்கக்கல் அகழ்வதற்காக தோண்டப்பட்டுள்ள பாரிய குழியினுள் புதையுண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை உயிருடன் மீட்பது சந்தேகமாக உள்ள போதும் அவர்களை உயிரற்ற நிலையிலாவது மீட்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவர்கள் இருவரும் சிக்கியுள்ள குழியானது சுமார் 8 தட்டுக்களைக் கொண்டமைந்த பாரிய குழியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# 2005 ஆம் ஆண்டு சனாதிபதி தேர்தலுக்கு ஐக்கிய தேசியக்கட்சி தயாராகிறது

ஐக்கிய தேசியக் கட்சி 2005 ஆம் ஆண்டுக்கான சனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகிறது. இது தொடர்பான தகவல் நேற்று கட்சியின் பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது இதற்கமைய எதிர்வரும் சனவரி மாதம் முதல் நாடு முழுவதும் ஐக்கிய தேசியக் கட்சி பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

அதேநேரம் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் அரசாங்கம் வரவு செலவுத் திட் டத்தைச் சமர்ப்பிக்கும் தினத்தில் நாடு முழவதும் பாரிய ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கும் நேற்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதில் கருத்துரைத்த கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது கட்சி நாட்டில் தொடச்சியாக அரசாங்கத்துக்கு எதிராக நடத்தி வரும் போராட்டங்களின் மூலம் அடுத்த ஆட்சியை கைப்பற்ற முடியும் எனத் தெரிவித்தார். அடையாள அட்டை களைத் தேர்தல்களில் கட்டாயப் படுத்தும் திட்டத்தின் மூலம் சுமார் 38 இலட்சம் மக்களின் வாக்குரிமையைப் பறிக்க அரசாங்கம் மேற்கொண்ட முயற்சியை அதில் திருத்தத்தை கொண்டு வந்ததன் மூலம் தமது கட்சி தடுத்து விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (32)

## ஒன்றரை வயதுக் குழந்தை கிணற்றில் தவறி வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

ஒன்றரை வயதுப் பாலகன் தவறுதலாகக் கிணற்றுள் வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை வேளை பெருங்குளம் எனுமிடத்தில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த ரவீந்திரன் -கபிலன் என்ற பாலகனே உயிரிழந்துள்ளார்.

பிரஸ்தாப சிறுவன் காலைக் கடன்களைக் கழிப்பதற்காக அதிகாலை வேளையில் நித்திரைத்தூக்கத்துடன் சென்ற போதே பாதுகாப்பற்ற முறையில் அமைந்திருந்த கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (33)

## அன்புவழிபுரத்தில் படையினருடன் இணைந்து சிங்களவர் தமிழ் இளைஞர்கள் மீது தாக்குதல்

(திருகோணமலை)

நேற்று மாலை 4.30 மணியளவில் அன்பு வழிபுரம் சந்தியில் தமிழ் இளைஞர்கள் மீது படையினரும் பொலிசாரும் அப்பகுதி சிங்கள இளைஞர்கள் சிலருடன் சேர்ந்து தாக்குதல் நடத்தியதாகவும், தமிழ் இளைஞர்கள் சிலர் காயமடைந்ததாகவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் இம் முறைப்பாட்டைச் செய்துள்ளார். காயமடைந்த தமிழ் இளைஞர்களில் இருவர் கடுமையான காயங்களுடன் திருகோணமலை வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.படையினரும் பொலிசாரும் துப்பாக்கியைக்காட்டிப் பயமுறுத்தி விரட்டித்தாக்கியதாகத் தமிழ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று வெள்ளிக்கிழமை திருமலை தமிழ்ப்பேரவையின் அழைப்பை ஏற்று நடத்தப்பட்ட ஹர்த்தாலின் எதிரொலியாகவே தமிழ் இளைஞர்கள் மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இனவாதிகள் திட்டமிட்டுப் படையினருடன் சேர்ந்து இத் தாக்குதலை நடத்தியதாக மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் திருகோணமலையில் உள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு முறையிட்டுள்ளார். (25)

### இனவாத....

தாகக் கல்வி வட்டராங்கள் தெரிவித்தன. ப்ஸ்சேவைகளும் ஸ்தம்பித்தன. சமாதானத்திற்கு எதிரான இனவாத சக்திகள் திருமலையைத் தங்களின் வன்முறையின் மத்திய இடமாக மாற்றியுள்ளதைக் கண்டித்தும், திருமலையில் சட்ட விரோதமாக சிங்களக் குடியோற்றங்களை ஏற்படுத்துவதையும், பௌத்த விகாரைகள் கட்டப்படுவதையும் கண்டித்தும் மற்றும் பல கோரிக்கைகளை முன் வைத்தும் பூரண கதவடைப்புப் போராட்டம் ஒன்றைத் திருமலை தமிழ் மக்கள் பேரவை ஒழுங்கு செய்திருந்தது. அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முக்கிய சந்திகளில் இராணுவத்தினரும் பொலிசாரும் நிறுத்தப்பட்டிருந்தனர். (25)

### தமிழீழ....

தளபதி கேணல் விதுஷா ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் மகளிர் சிறப்புத்தளபதி விடுதலை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து மாலதியினுடைய திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை லெப்.கேணல் பொன்னம்மான் கண்ணிவெடிப் பிரிவு மகளிர் பொறுப்பாளர் அஸ்வினி ஏற்றி வைத்தார். மலர் மாலையினை மாலதியினுடைய தந்தையார் பேதுருப்பிள்ளை அணிவித்தார். தொடர்ந்து அகவணக்கத்தையடுத்து கண்காட்சியைப் பார்வையிடும் நிகழ்வு ஆரம்பமாகி மாலை 6.00 மணிவரை நடைபெற்றது. பெருந்திரளான மக்களும், பாடசாலை மாணவர்களும் கலந்து கண்காட்சியைப் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. கண்காட்சி பார்வையிடும் நிகழ்வு முடிந்தவுடன் மாலை நிகழ்வுகள் ஆரம்பமாயின. இரவு 7.30 மணிக்கு வவுனியா மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் அலை தலைமையில் இந்நிகழ்வுகள் ஆரம்பமாயின.

முதல் நிகழ்வாக மருத்துவப் பிரிவுமகளிர் பிரிவின் மாவீரர் அஞ்சலி நடனம் நடைபெற்றது. அடுத்து மருத்துவப்பிரிவு மகளிர் பிரிவில் தேசியத்தலைவர் வாழ்த்து நடனம் இடம்பெற்றது.

தொடர்ந்து தலைமையுரையினையடுத்து மருத்துவப் பிரிவு மகளிர் பிரிவின் நாடகம் நடைபெற்றது. அடுத்து அரசியல்துறை மகளிர் பிரிவின் நாடகம் நடைபெற்றது. தொடர்ந்து சிறப்புரையினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து மணிமொழியின் இசைக் கச்சேரி நடைபெற்றது.

அடுத்து சிறப்புரையினைக் கடற்புலி அரசியல்பிரிவுப் பொறுப்பாளர் பூரணி நிகழ்த்தினார். இறுதியாகத் தமிழீழ இசைக் குழுவினரின் இன்னிசை கானங்களுடன் நேற்றைய நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்தன. (கு,ச)

## மின்சாரம் தடைப்படும்

(அலுவலக செய்தியாளர்)

தாழமுத்த மின்மார்க்கத்தில் மண்டல் கம்பியை இணைப்பதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் 12ஆம் திகதியன்று கிளிநொச்சி ஏ-9 வீதியில் கிளிநொச்சி பொது மைதானத்திலிருந்து கந்தசுவாமி ஆலயம் வரை மேற் கொள்ளப்பெறவுள்ளதெனத் தெரிய வந்துள்ளது.

அன்றைய தினம் காலை 7.30 மணி தொடக்கம் மாலை6.00 மணி வரை மின்சாரம்தடைப்படும் என மின்சார சபையினர் வாடிக்கையாளருக்குத் தெரிவித்துள்ளனர். (சோ.கு)

### நாளை...

மகிழ்ச்சியுடன் விடுதலைப்புலிகளின் மகளிர் படையணியினர் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### லெப்.கேணல்....

நிறுத்தி, வேலை செய்தவர்களையும் கைதுசெய்து உபகரணங்களையும் எடுத்துச் சென்றமை தொடர்பாக மன்னார் மக்கள் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்து மன்னார் வெகுஜன ஒன்றியம் மூலமாக மகஜர் ஒன்றைத் தயாரித்து மன்னார் அரச அதிபரிடம் நேற்று கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

தமது மண்ணின் மைந்தனின் சிலையை வைப்பதற்கு தமக்கு உரிமை உண்டெனவும், இதனைத் தடுத்து நிறுத்த முடியாதெனவும், உடனடியாக இந்த இடத்தில் சிலை வைப்பதற்குத் தமக்கு இடமளிக்க வேண்டுமெனவும், இல்லாவிடின் மக்கள் போராட்டத்தில் இறங்கவுள்ளதாகவும் தெரிவித்து அந்த மகஜரினைக் கையளித்துள்ளனர். (மி)

### தம்மை...

வத்தினர் ஆர்ப்பாட்டம் செய்த அகதிகளை அகற்ற முயற்சி செய்தனர்என்றும், அப்போது இரண்டு அகதிகள் தாக்குதலுக்குள்ளானார்கள் .என்றும் கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டதாகக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. பதற்றம் நிலவியதை அடுத்து பொலிசாரும் மேலதிகமாக அங்கு அனுப்பி வைக்கப்பட்டனர். நிலாவெளியிலிருந்த திருமலையில் அமைந்துள்ள தங்களது அலுவலகத்திற்கு வாகனத்தில் வந்து கொண்டிருந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலைக்கான பதில் தலைவர் ஹெல்கேலைபேர்கும், கடல் கண்காணிப்பாளர் டோர்கெல் ஆகியவர்கள் மறியற் போராட்டம் நடந்த இடத்தைத் தவிர்த்து துவரங்காடு ஊடாகத் திருமலை நகரை வந்தடைந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அதிகாரிகள், கன்னியாவில் படையினர் புதிதாகக் காவலரண்களை அமைத்து வருவதாகவும், குச்ச வெளியில் குடிமக்களின் காணிகளில் கடற்படையினர் நிலை கொண்டிருப்பதாகவும் இதன் காரணமாகத் தாங்கள் மீளக்குடியமர்வது முடியாத காரியமாக இருப்பதாகவும் தெரிவித்தனர். (25)

## தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் 4ஆம் நாள் நிகழ்வுகள்

2ஆம் லெப். மாலதியின் 17 ஆவது ஆண்டு நினைவு நாளையும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் ஒட்டிய மாபெரும் படைக்கலக் கண்காட்சி கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் இன்றும் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. அத்தோடு மாலை 7.30மணிக்கு முல்லை மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுகளில் லெப்.கேணல் நவம் அறிவுக்கூட கலைஞர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறுவதுடன் அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன்அவர்களும், சோதியா படையணி கேணல் துர்க்கா அவர்களும், இலங்கை தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் அவர்களும் சிறப்புரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

## சுவீடன் தூதுக்குழு நேற்று யாழ். குடா நாட்டுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

சுவீடன் நாட்டைச் சேர்ந்த தூதுக்குழு ஒன்று நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்துள்ளது.

இலங்கைக்கர்ன சுவீடன் நாட்டுத் தூதரகத்தின் அதிகாரிகளான பீற்றர்றொகின், பென்ற லேனஸ் மற்றும் லினாஸ்பெக் ஆகியோர் தலைமையில் யாழ். இற்கு.விஜயம் செய்த இக்குழுவினர் யாழ். மாவட்ட அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து சந்திரிகா அரசினால் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி, புனர்வாழ்வு, பொருளாதார மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு குறித்த நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர்.

மேலும் நல்லூர் கோவில் வீதியிலுள்ள யாழ். மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் இணைய அலுவலகத்திற்கு விஜயம் செய்த இப் பிரதிநிதிகள் அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையப்பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியிருந்தனர்.

எதிர்வரும் காலங்களில் சனநாயக ரீதியிலான தேர்தல்கள் நடப்பதனை உறுதிப்படுத்துவதற்கான ஆலோசனைகளை இப் பிரதிநிதிகள் குழு இலங்கை அரசிற்கு வழங்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (27)

## மு.கா.வின் யாழ்.மாநாடு காலவரையறையின்றி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணத்தில் நாளை இடம்பெறவிருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் மாநாடு காலவரையறை இன்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களும்-முஸ்லிம்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் யாழ்.குடாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் மாநாட்டை நடத்துவதன் மூலம் யாழ்.வாழ் தழிழ் -முஸ்லிம் உறவுகள் பாதிப்படையும் எனச் சுட்டிக்காட்டி யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறியுள்ள முஸ்லிம் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்ததைத் தொடர்ந்தே மேற்படி மாநாடு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ்.மாவட்ட இணைப்புக்குழு தெரிவித்துள்ளது. (33)

### 2 ஆம் லெப்...

தொடர்ந்து சிறப்புரைகள் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும். இதேவேளை நாளை புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கில் முல்லைத்தீவு மாவட்டப் பெண்கள் அமைப்புக்களின் ஒழுங்கமைப்பில் எழுச்சி நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (08)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில் 20 - 07 - 1982



தாயக மண்ணில் 09 - 10 - 2000

**2ஆம் .லெப். சாந்தமலர்**

**நவரத்தினம் லதா**

(பளைப்பகுதியில் இராணுவத்தினரின் எறிகணை வீச்சில் வீரச்சாவடைந்தார்)

வீரச்சாவு அடைந்து ஆண்டுகள் 4ஆனாலும்.
தாயகக்கனவுடன் தலைவன் வழிநடந்த என் அன்புச் செல்வமே!
நீ உதிர்ந்து ஆண்டுகள் நான்கு ஆனபோதிலும்
உன் நினைவுகள் என்றும் எம் உள்ளங்களில்.
இந் நாளில் வீரச்சாவடைந்த மாவீரர்களையும் நினைவு கூருகின்றேன்..

தகவல்:-
சகோதரன்
சதீஸ்குமார்

112/2 வலதுகரை,
முத்துஐயன்கட்டு.
முல்லைத்தீவு.

(5161)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.